


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சப்த தீவுகளின் ஒன்றான
வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகவும், கிளிநொச்சி திருநகரை
வசிப்பிடமாகவும் கொண்ட சைவ வேளாண் குலதிலகர்

# அமரர்
# குழந்தைவேலு ஆனந்தராசா
## (ஐங்கரன் மாமா)
## அவர்களின் சிவபதப்பேறு
## குறித்த 31ஆம் நாள்
## "ஆனந்தமலர்"
## 15.04.2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எமது குடும்பத் குலதெய்வம்
குழந்தைவேலு ஆனந்தராசா ( ஐங்கரன்)
உதிரத்தை வியர்வையாக்கி
உடலையே மெழுகாக்கி
வேண்டியதை வேண்டியாங்கு ஈய்ந்து
எமக்கு உயிர்த்துணையாய்
உயர் பண்பும் ஓய்விலா உழைப்பும் கொண்டெம்மை
மதிப்புடன் வாழவைத்து
பக்தியுடன் இசையால் பலரையும் கவர்ந்து
அருளோசை என ஒளிர்ந்து
எல்லோர்க்கும் எமை அறிய வைத்த
எம் அப்பாவான தெய்வத்திற்கு சமர்ப்பணம்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

" வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"



மண்ணில்
20
11
1943

விண்ணில்
16
03
2020

# அமரர்
# குழந்தைவேலு ஆனந்தராசா
## (ஐங்கரன் மாமா )

## அவர்களின் திதி நிர்ணயம்

வீசுபுகழ் விகாரிதனில் பங்குனித் திங்களில்
பூவுலகை அபரபக்க அட்டமியில் – ஓங்கு புகழ்
வேலணையூர் பதியில் உதித்த ஆனந்தராசா
கிளியூர் திருநகரில் ஈசன் பதமடைந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவாரம்

திருச்சிற்றம்பலம்

தோடுடைய செவி யன்விடை யேறியோர்
தூவெண் மதிசூடிக்
காடுடையசுட லைப்பொடி பூசியென்
னுள்ளங் கவர்கள்வன்
ஏடுடையமல ரான்முனை நாட்பணிந்
தேத்த வருள்செய்த
பீடுடையபிர மாபுரமேவிய
பெம்மா னிவனன்றே.

திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம்

**தாயினும் நல்ல தலைவர்**

**தாயினும் நல்ல தலைவர் என்றடியார்**
**தம்மடி போற்றிசைப்பார்கள்**
**வாயினும் மனத்தும் மருவி நின்றகலா**
**மாண்பினர் காண்பலவேடர்**
**நோயிலும் பிணியும் தொழிலர் பால்நீக்கி**
**நுழைதரு நூலினர் ஞாலம்**
**கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த**
**கோணமாமலை அமர்ந்தாரே.**

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்

இடரினுந் தளரினும் எனதுறுநோய்
தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்தநஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே
இதுவோஎமை யாளுமா
றீவதொன் றெமக்கில்லையேல்
அதுவோவுன தின்னருள்
ஆவடு துறையரனே.

திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம்

நத்தார்படை ஞானன்பசு
வேறிந்நனை கவுள்வாய்
மத்தம்மத யானையுரி
போர்த்தமண வாளன்
பத்தாகிய தொண்டர்தொழு
பாலாவியின் கரைமேல்
செத்தாரெலும் பணிவான்திருக்
கேதீச்சரத் தானே

திருச்சிற்றம்பலம்



திருச்சிற்றம்பலம்

பொன்னார் மேனியனே
புலித்தோலை அரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல்
மிளிர்கொன்றை யணிந்தவனே
மன்னே மாமணியே
மழபாடியுள் மாணிக்கமே
அன்னே உன்னையல்லால்
இனியாரை நினைக்கேனே

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாசகம்

திருச்சிற்றம்பலம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்தஆ ரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் றனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே
திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம்

பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதும் திருவாயால் மறைபோலுங் காணேடீ
பூசுவதும் பேசுவதும் பூண்பதுவுங் கொண்டென்னை
ஈசனவன் எவ்வுயிர்க்கும் இயல்பானான் சாழலோ
திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம்

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே !
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே !
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே !
சித்தத்துள் தித்திக்கும் தேனே !
அளிவளர் உள்ளத்(து) ஆனந்தக் கனியே !
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே
திருச்சிற்றம்பலம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎம் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் றன்னைக் கண்டுகண் டுள்ளம்
குளிரஎன் கண்குளிர்ந் தனவே

திருச்சிற்றம்பலம்



திருச்சிற்றம்பலம்

அன்றே என்றன் ஆவியும்
உடலும் உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னைஆட்
கொண்ட போதே கொண்டிலையோ
இன்றோர் இடையூ றெனக்குண்டோ
எண்தோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய்
நானோ இதற்கு நாயகமே

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

**திருச்சிற்றம்பலம்**

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்த தோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்குந் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

**திருச்சிற்றம்பலம்**

---

**திருச்சிற்றம்பலம்**

ஏகநாயகனை இமையவர்க்கு அரசை
என்னுயிர்க் (கு) அமுதினை எதிரில்
போகநாயகனைப் புயல்வணற்குஅருளிப்
பொன்னெடுஞ் சிவிகையா வூர்ந்த
மேகநாயகனை மிகுதிரு வீழி
மிழலைவிண் ணிழிசெழுங் கோயில்
யோகநாயகனை அன்றிமற் றொன்றும்
உண்டென உணர்கிலேன் யானே.

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருச்சிற்றம்பலம்**

இடர்கெடுத் தென்னை ஆண்டுகொண் டென்னுள்
இருட்பிழம் பறஎறிந் தெழுந்த
சுடர்மணி விளக்கி னுள்ஒளி விளங்குந்
தூயநற் சோதியுட் சோதீ
அடல்விடைப் பாகா அம்பலக் கூத்தா
அயனொடு மால்அறி யாமைப்
படரொளி பரப்பிப் பரந்துநின் றாயைத்
தொண்டனேன் பணியுமா பணியே.

**திருச்சிற்றம்பலம்**

---

**திருச்சிற்றம்பலம்**

நீறணி பவளக் குன்றமே நின்ற
நெற்றிக்கண் உடையதோர் நெருப்பே
வேறணி புவன போகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா
ஆறணி சடைஎம் அற்புதக் கூத்தா
அம்பொன்செய் அம்பலத் தரசே
ஏறணி கொடிஎம் ஈசனே உன்னைத்
தொண்டனேன் இசையுமா றிசையே.

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பல்லாண்டு

**திருச்சிற்றம்பலம்**

மன்னுக தில்லை வளர்கநம் பத்தர்கள்
வஞ்சகர் போயகலப்
பொன்னின்செய் மண்டபத் துள்ளே புகுந்து
புவனியெல் லாம்விளங்க
அன்ன நடைமட வாள்உமை கோன்அடி
யோமுக் கருள்புரிந்து
பின்னைப் பிறவி யறுக்க நெறிதந்த பித்தற்குப்
பல்லாண்டு கூறுதுமே

**திருச்சிற்றம்பலம்**

**திருச்சிற்றம்பலம்**

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்
பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்
மிண்டு மனத்தவர் போமின்கள்
மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டும் கொடுத்தும் குடிகுடி யீசற்காட்
செய்மின் குழாம்புகுந்
தண்டங்கடந்த பொருள்அள வில்லதோர்
ஆனந்த வெள்ளப்பொருள்
பண்டும் இன்றும் என்றும் உள்ளபொருள் என்றே
பல்லாண்டு கூறுதுமே.
திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம்
சீரும் திருவும் பொலியச்
சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவார் உலகில்
ஊரும் உலகும் கழற உழறி
உமைமண வாளனுக்(கு)ஆட்
பாரும் விசும்பும் அறியும்
பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே
திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம்
நெய்யிடை நல்லதோர் சோறும் நியதமும் அத்தாணிச் சேவகமும்
கையடைக் காயும் கழுத்துக்குப் பூணொடு காதுக்குக் குண்டலமும்
மெய்யிட நல்லதோர் சாந்தமும் தந்துஎன்னை வெள்ளுயி ராக்கவல்ல
பையுடை நாகப் பகைக்கொடி யானுக்குப் பல்லாண்டு கூறுவனே
திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

திருச்சிற்றம்பலம்
நல்லசொற்பொருள் நாளு நடாத்தவும்
எல்லை காணரும் பேரின்ப மெய்தவும்
வெல்லும் யானை முகத்தினை மேவிவாழ்
வல்ல பைக்குரி யானை வழுத்துவாம்.
திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம்
பூ மலர் மிசைவரு புனித னாதியோர்
தாமுணர் வரியதோர் தலைமை யெய்தியே
மாமறை யதற்கொரு வடிவ மாகியோன்
காமரு செய்யபூங் கழல்கள் போற்றுவோம்.
திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம்
சீராருஞ் சதுர்மறையுந் தில்லைவா ழந்தணரும்
பாராரும் புலிமுனியும் பதஞ்சலியும் தொழுதேத்த
வாராருங் கடல்புடைசூழ் வையமெலா மீடேற
ஏராரு மணிமன்று ளெடுத்ததிரு வடி போற்றி.
திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருச்சிற்றம்பலம்**

**பரந்தெழுந்த சமண் முதலாம் பசமய விருணீங்கச்**
**சிரந்தமுவு சைவசெறித் திருநீற்றினொளி விளங்க**
**அரந்தைகெடப் புகலியர்கோன் அமுதுசெயத் திருமுலைப்பால்**
**சுரந்தளித்த சிவகாம சுந்தரிபூஞ் கழல் போற்றி**

**திருச்சிற்றம்பலம்**

**திருச்சிற்றம்பலம்**

மண்ணுல கத்தினில் பிறவி மாசற
எண்ணிய பொருளெலாம் எழுதில் முற்றறக்
கண்ணுத லுடையதோர் களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்.

**திருச்சிற்றம்பலம்**

## வாழ்த்து

திருச்சிற்றம்பலம்

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறையரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்புகழ்

**திருச்சிற்றம்பலம்**

இறவாமற் பிறவாமல் எனையாள்சற் குருவாகிப்
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசொற் குமரேசா
அறநாலைப் புகல்வோனே அவிநாசிப் பெருமாளே.

**திருச்சிற்றம்பலம்**

**திருச்சிற்றம்பலம்**

அற்றைக் கிரைதேடி அத்தத் திலுமாசை
பற்றித் தவியாத பற்றைப் பெறுவேனோ
வெற்றிக் கதிர்வேலா வெற்பைத் துளைசீலா
கற்றுற் றுணர்போதா கச்சிப்பெருமாளே.

**திருச்சிற்றம்பலம்**

**திருச்சிற்றம்பலம்**

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மானெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணர்நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் திநிபாதா
வெற்றிவே லாயுதப் பெருமாளே



**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்

கைத்தல நிறைகனி அப்பமோ டவல்பொரி
கப்பிய கரிமுகனடிபேணிக்
கற்றிடுமடியவர் புத்தியிலுறைபவ
கற்பகமெனவினை - கடிதேகி
மத்தமும் மதியமும் வைத்திடுமரன்மகன்
மற்பொருள் திரள்புய - மதயானை
மத்தள வயறனை உத்தமி புதல்வனை
மட்டவிழுலர்கொடு - பணிவேனே
முத்தமிழ் அடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய - முதல்வோனே
முப்புரமெரிசெய்து அச்சிவன் னுறைரதம்
அச்சது பொடிசெய்த - அதிதீரா
அத்துய ரதுகொடு சுப்பிரமணிபடும்
அப்புனமதனிடை -இபமாகி
அக்குற மகளுடன் அச்சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமாளே.

திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம்

ஏறுமயி லேறிவிளை யாடுமுக மொன்றே
ஈசருடன் ஞானமொழி பேசுமுக மொன்றே
கூறுமடி யார்கள்வினை தீர்க்குமுக மொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுக மொன்றே
மாறுபடு சூரரை வதைத்தமுக மொன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுக மொன்றே
ஆறுமுக மானபொருள் நீயருளல் வேண்டும்
ஆதியரு ணாசல மமர்ந்த பெருமாளே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேற்றம்

ஆழிசூழ் உலகம் பொய்யே !
அவனியில் வாழ்வும் பொய்யே!
மேனியும் பொய்யே பொய்யே !
ஆவியும் போதல் மெய்யே!
ஆனந்தன் போனதற்கு ,
அழுது நாம் புலம்பல் வீணே!
அவன் வழி நாமும் ஓர் நாள்
ஏகுதல் மெய்யே மெய்யே !
விதைத்தவன் அறுத்துச் சென்றால்
விசும்புதல் வீணே வீணே.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வாழ்க்கை வரலாறு

வேலணையூர் சுப்பிரமணியம் தங்கமுத்து செய்தவத்தால் வந்துதித்த குழந்தைவேலு சின்னத்தம்பி நாகமுத்து ஈன்ற சின்னம்மா மங்கையை மணம்செய்து வாழும் காலை வந்துதித்தனர் பஞ்சபாண்டவராய் தங்கராசா செல்வநாயகம் தியாகராசா, சிவராசா ஆகியோருடன் நான்காவதாய், வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கு வந்துதித்தார் அண்ணல் ஆனந்தராசா இவர் தனது ஆரம்பக் கல்வியை வேலணை வங்களாவடி சரஸ்வதி வித்தியாலத்திலும் இடைநிலைக் கல்வியை வேலணை மத்திய கல்லூரியிலும் கற்றுத்தேறினார். இந்நிலையில் கணிதப் பாடத்தில் விற்பன்னராய் திகழ்ந்தார். தமையனின் வழிகாட்டலில் வணிகத்துறையில் பிரவேசித்து அரும்பொருளீட்டினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேல்முருகன் ராான்ஸ்போட்டை நடத்தியதோடு தம்பி சிவராசாவுடன் இணைந்து ஐங்கரன் பல்பொருள் அங்காடியையும் திறம்பட நிர்வகித்ததோடு மட்டுமல்லாமல் விவசாயத்துறையிலும் சிறந்து விளங்கினாார்.

வட்டக்கச்சியை வாழ்விடமாகக் கொண்ட பரமநாதனுக்கும் ஆச்சிமுத்துவுக்கும் கிடைக்கப் பெற்ற முதல் முத்தாம் சுகாதாரத் துறையில் பணிபுரிந்த வள்ளியம்மாவைக் கண்டார். களிகூர்ந்து காதல் கொண்டார். வள்ளியும் இளவலும் அன்னை தந்தை அத்தனை பேரின் ஆசியுடனும் கரம்பிடித்தனர். இல்லறம் சிறக்க எளிமையாய் வாழ்ந்து நல்லறம் செய்தனர். நானிலம் போற்ற சொற்றிறம்பாது வல்லமையோடு வாழ்நாளைக் கழித்தனர். காதலோடு கடிமணம் புரிந்து வாழும் பொழுதில் மோகனப்புன்னகையுடன் உதித்தனன் மோகனராசா D-7 இந்துக்கல்லூரியில் கல்வி பயின்றவன் உயர்தரத்துடன் நிறுத்திக் கொண்டான். நாட்டுச் சூழ்நிலை காரணமாக சொந்த நாட்டில் பணிபுரிய முடியாது லண்டன் மாநகர் அனுப்பி வைத்ததோடு அவருக்கேற்ற வாழ்க்கைத்துணையாக தயாளினியை தேர்ந்தெடுத்தார். அதன் பயனாய் அனந்திகா , அட்சயா எனும் இரு பேரப்பிள்ளைகளைப் பெற்றார்.

மோகனையடுத்து ஆனந்தி என அழைக்கப்படும் உமையவளின் நாமம் கொண்ட தட்சாயினியையும் ஈன்றெடுத்தார். உயர் கல்வி கற்க வைத்து அரச திணைக்களத்தில் கடமையாற்றும் பேற்றை ஈந்தார். கடமையையே கண்ணெனப்போற்றும் சிரேஸ்ட புத்திரிக்கு ஏற்ற வரனாக அரச தொழில்புரியும் பொன்மனம் படைத்த புஸ்பாகரனுக்கு முறைப்படி திருமணம் செய்து வைத்தார். அதன் பயனாய் அபிநயா, குபேரன் , ஆதவன் எனும் அன்புச் செல்வங்கள் அவதரிக்க அவர்களுக்குத் தேவையான அனைத்தையும் செய்து வளர்த்தார். அன்னாரின் பிரிவால் அப்பிள்ளைகள் படும் துயரம் சொல்லிலடங்கா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனந்தியை அடுத்து ஈழமக்கள் என்றும் மறவாத வீரமைந்தன் குகராசா எனும் இளவல் வந்துதித்தான். நாட்டிற்காக அவரை ஈந்து துயரத்திலும் பெருமை கொண்டார். அடுத்த மகன் அரவிந்தராசா அவனையும் லண்டனுக்கு அனுப்பி செல்வச் செழிப்போடு வாழவைத்ததோடு ஷாஷ் எனும் ஆரணங்கை மணம்முடிக்கச் செய்தார். அதன்பயனாக அய்ஷா,அயான், எனும் பேரப்பிள்ளைகளை கண்டு கொண்டார்.

கனிஷ்டபுதல்வி தர்சினி அவளின் வருகை ஆனந்தனுக்கு அதிஷ்ட வாழ்வைத் தர தங்கம் என அழைத்து; தழுவி வளர்த்தார். கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கி ஆங்கில ஆசிரியையாக வலம்வரும்போது சீரிய குணமும் நற்பண்பும் ஒருங்கே அமையப்பெற்ற யசோதரனை கரம்பிடித்துக் கொடுத்தார். அவரின் தவப்பயனால் அங்குழலி , அருள்நயனி ஆகிய அதிஷ்ட தேவதைகள் உதித்தனர். அவர்களை தன்னுடனேயே வைத்து தாலாட்டி சீராட்டி அமுதூட்டி வளர்த்தார். அவர்களின் கல்வியோடு அன்றாட தேவைகள் அனைத்தையும் அயர்வின்றிச் செய்தார். அவர் பிரிவுத் துயரால் துடிதுடித்துக் கதறும் பிஞ்சுகளின் துயர்துடைக்க மீண்டு வருவாரா என ஏங்கித் தவிக்கின்றனர்.

இத்தகைய அன்புத்தெய்வம் அவர்கள் கிளிநொச்சிப் பகுதியிலே தனக்கென ஓர் அடையாளத்தை ஏற்படுத்திக்கொண்ட வள்ளல் அமரர் குழந்தைவேலு ஆனந்தராசா அவர்கள் 16.03.2020 அன்று இறைபதம் அடைந்தார்.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனைவியின் மனதிலிருந்து......

திருமண காலத்திலிருந்து ஒரு கணம் கூடப்பிரியாது வாழ்ந்த என் அருந்துணை இவ் உலகை விட்டுப்பிரியும் சோக நிகழ்வைக் காண இறைவன் விடவில்லை. உங்கள் பிரிவின் துயரால் இன்னலுறும் என்னைத் தேற்ற இவ்வுலகில் யாருமில்லை. நோய்நொடி என்று பாயில் படுக்காமல் நொடிப்பொழுதில் ஈசனுமை என்னை விட்டுப் பிரித்தனனோ

ஓரிரண்டு மணித்துளியில் உலகைவிட்டு சென்றதென்ன
ஈசன் துதிபாடியதால் எம் பாசமது மறந்ததுவோ!
காற்றும் நிற்காதோ கனகடலும் ஓயாதோ - என்
பேச்சும் மூச்சும் நிற்காதோ இக்கணமே

அண்ணன்மார் மூவர் அவரையடுத்து ஒரு தம்பி
பஞ்ச பாண்டவர்களில் ஒருவராய் பாரினிலே வலம் வந்தார்.
பஞ்சம் என்றொன்றை நம் வாழ்வதனில் கண்டதில்லை
பஞ்சம் என்று வருவோரை பார்க்காது விட்டதில்லை.
வந்தவரை இருத்தி வயிறார உணவளித்து
பாசமுடன் அனுப்பி வைக்கும் பாரி இன்று இங்கில்லை
சென்ற என் மணாளன் என்று வருவாரோ என்று
ஏக்கமுடன் காத்திருக்கின்றேன்.



**-மனைவி-**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருமக்களின் எண்ணத்திலிருந்து......

மருமக்களாம் எம்மை
மக்களாய்ப் பேணி அரவணைத்தீர்கள்
மாமாவாய் நாம் நினைக்க மறந்த
தந்தை நீரல்லவோ!
எப்படி நாம் மறப்போம்
உங்கள் அன்புச் செய்கைகளை
தப்பாமல் இறையடியில்
ஆழ்ந்திடுவீர்கள் நாம் என் செய்வோம் மாமா.

**–மருமக்கள்–**

## பேரப்பிள்ளைகளின் உள்ளத்திலிருந்து.....

பேரமக்களாம் எம்மை பாலில் குளிப்பாட்டி
பாட்டாடை உடுத்தாட்டி நாலா வகை உணவால்
நல்ல களைப்பாற்றி கோலால் எடுத்து
கொடுமை செய்யாத கொள்ளை என்ன அம்மப்பா
வேலால் துளைத்து வேகுதே எமதுள்ளம்.



**-பேரப்பிள்ளைகள்–**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெரியண்ணர், பெரியண்ணி, பிள்ளைகளின் கண்ணீர் மடல்....

என் அருமை தம்பி ஆனந்தனின் மரணச்செய்தி கேட்டு எங்கள் குடும்பமே அதிர்ச்சி அடைந்தோம். "விதியை யார் வெல்வார்" நோயுற்று இரண்டு நாள் படுக்கையில் இருந்து போனால் கவலை குறைவாக இருந்திருக்கும். எல்லாம் இரண்டு நிமிடத்தில் முடிந்து விட்டது.

நாங்கள் ஐந்து சகோதரர்கள் சிறுவயதிலிருந்து சந்தோசமாகவும் ஒற்றுமையாகவும் வளர்ந்து வாழ்ந்து வந்தோம் . எங்கள் குடும்ப கஸ்ரம் காரணமாக நான் சிறுவயதிலேயே கடைக்குப் போய் உழைத்து தம்பிமாரை படிப்பித்தேன். ஐயாவும், அம்மாவும் எங்களை அன்போடும், பாசத்தோடும் வளர்த்து விட்டார்கள். எல்லோரும் திருமணமாகி சந்தோசமாக இருக்கிறார்கள். தற்போது நாட்டுநிலைமை காரணமாக எல்லோரும் பிரிந்து வேறுவேறு நாடுகளில் வாழ்கிறோம்.

### பெரியண்ணி

பெரியண்ணி! என்று கூப்பிடும் சத்தம் இன்றும் என் காதில் கேட்கிறது. நீங்கள் அண்ணியிடம் தான் எல்லாம் சொல்லிக் கதைப்பீர்கள். அண்ணரிடம் நேரில் கதைப்பது குறைவு. நான் முதல் முதலில் உங்கள் அண்ணியாக வந்தபோது அண்ணி , அண்ணி என்று அன்புடன் அழைத்தீர்கள். அண்ணி அம்மாவுக்கு சமன் என்று சொன்னீர்கள். உங்கள் இழப்பு எங்களால் தாங்க முடியவில்லை. ஒருமாதத்திற்கு முன் போனில் கதைத்தபோது அண்ணரைப் பற்றியே கேட்டு அழுதீர்கள். உங்களைக் கடைசியாக பார்க்கும் பாக்கியம் கூட எங்களுக்குக் கிடைக்கவில்லை.

### பிள்ளைகள்

சின்னையா, உங்கள் திருமுகம் தான் எங்கள் கண்முன் நிற்கிறது. வெள்ளை வேட்டி, வெள்ளை சேட்டு, கழுத்தில் பெரிய சங்கிலி அணிந்த தோற்றம் நினைவில் நிக்கிறது. வேலணை முத்துமாரியம்மன் கோவிலுக்கு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு வருடமும் தீ மிதிக்க வருவீர்கள். நாங்கள் சிறுவயதில் கோயிலுக்கு வந்ததும் உங்களைத் தான் தேடுவோம். ஏன் என்றால் ஐஸ்கிறீம், கச்சான், காப்பு, காசு எல்லாம் நிறைய தருவீர்கள். கடைசியாக போனில் கதைத்த போது ஐயாவைப் பார்க்க ஆசையாக இருப்பதாக சொல்லி அழுதீர்கள்.

அவருடன் கதைத்த போது அண்ணா! என்று கூப்பிட்டீர்கள். ஐயா ஆனந்தராசா என்று சொன்னார். நீங்கள் அழுதுவிட்டீர்கள். அதுவே உங்களுடன் கடைசியாக கதைத்தது . உங்கள் எல்லோரையும் பார்க்கவரவிருந்தோம் நாட்டுச் சூழ்நிலை காரணமாக வரமுடியவில்லை. உங்களுக்குப் பெண்பிள்ளைகள் மீது பிரியம். எங்கள் வீட்டுக்கு வரும்போது எங்களை சைக்கிளில் ஏற்றி வீட்டுக்குக் கொண்டுபோய் விடுவீர்கள். நாங்கள் அழுததும் திரும்பக் கொண்டு வருவீர்கள். வரும்போது இனிப்புப் பண்டங்கள் வாங்கித் தருவீர்கள். இவையெல்லாம் நினைக்கும் போது கவலையாக இருக்கிறது. உங்கள் ஆத்மா அமைதியடைய முத்துமாரியம்மனை வேண்டுகின்றோம்.

**பெரியண்ணன் குடும்பம்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னப்பா எங்கு சென்றீர்.....

*சின்னப்பா சின்னப்பா என்று,*
*ஆசையுடன் தேடிவந்தோமே!*
*இன்று நீங்கள் எங்களைத்*
*தவிக்கவிட்டு எங்கு சென்றீர்கள்?*
*அன்பினை சிரிப்புடன் பரிமாறி*
*அப்பாவின் இடத்திலிருந்து...*
*அணைத்துக் கொள்வீர்களே!*
*அதை மறந்து போனதன் மாயமென்ன?*
*அந்த நினைவுகள் எல்லாம் நெஞ்சோடு*
*நெஞ்சாய் நிறைந்துள்ளது.*
*மறக்க முடியுமா?*
*உங்கள் அன்பை இன்று.*
*இந்த மண்ணில் மறைந்தாலும்*
*மறவாமல் உங்கள் அன்பும்*
*பாசமும் என்றும் எங்கள்*
*மனங்களில் நிறைந்திருக்கும்*
*சின்னப்பா எந்தப் பிறவியில்*
*காண்போம் இனி நாம்,*
*உங்கள் பிரிவில் வாடும்.....*

**ஆசை அண்ணி,**
**செல்வி , வாணி, ரவி, மதி**
**பேரப்பிள்ளைகள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆனந்தராசா .....

தன்னால் முடிந்த மட்டும் மற்றவர்க்கு ஆனந்தத்தைக் கொடுத்தவர்.
முகத்திரையின் முன்னும் பின்னும் ஒரே முகம் தான் அவருக்கு
பல முகங்களோடு வாழும் மனிதர்களுக்கு மத்தியில்
உள்ளொன்று பிறிதொன்று கூறாத மனிதன்.
பலருக்கும் உதவிக் கரங்கள் நீட்டியவர்.
சின்ன அண்ணனுக்கு ஒரு வலது கை.
சின்ன அண்ணிக்கு ஒரு உடன்பிறவா சகோதரன்.
தந்தையைப் போல சித்தப்பா
நாங்கள் என்றும் மதிப்பு ம் மரியாதையும் வைத்திருக்கும்
ஒரு அரிய மனிதன் .
அவருக்கு உறவினர் என்பது எமக்குப் பெருமை
அவர் வழி நாமும் வாழ கொஞ்சமாவது முயற்சிப்போம்
இறைவனுக்குத் தான் படைத்த சிலரில் அலாதிப் பிரியம்
அவர்களைத் தன்னோடு வைத்திருப்பதற்கு
ஆனந்தராசாவும் அதில் அடக்கம்.
அறுதியிட்டு நாங்கள் கூறுகின்றோம்
உறவுகள் நட்புகள் எல்லோருக்கும்
எமது வணக்கங்களும் நன்றிகளும் உரித்தாகட்டும்.



**சின்ன அண்ணன்**
**தியாகராசா குடும்பம் .**
**(கனடா)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உனை நினைத்து இறை தொழுவேன்

ஒரு தாய் வயிற்றுதித்தோம் அண்ணா – நாம்
ஓர் குடைக்கீழ் பயணித்தோம்.
இது நாள் வரைக்கும் நாம்
இருவார்த்தை கண்டறியோம்.
எம் விதியால் அகன்றிருந்தும்
விலகிநின்றும் ஒன்றிணைந்தோம்.
இன்னும் குரலால் இணைந்திருந்தோம்
குதூகலமாய் உரை பகன்றோம்.
துணையாய் நாம் தினமிருந்தோம்
தூண் என நாம் துணை பகிர்ந்தோம்.
இது ஏது வினை அண்ணா
இங்கு எமது இணைபிரிக்க
கொடிதான எமனாகி கொண்டுன்னை
எனை விட்டு தனியாகப் பிரித்தெடுத்தார்
தாங்காது உன் தம்பி
அனலிட்ட மெழுகாக அண்ணா நான்
இனித்தினமும் உருகியே விழி சொரிய
உதித்ததுவோ ஓர் பொழுது.
வழி தொட்டு வருவேன் நான்
வாஞ்சையோடு உன்னிடத்தில்,
அது மட்டும் அண்ணா நீ
எம் அன்புருவாம் இறைபதத்தில்
உறைவுற்று இருந்திட ,
நான் உனை நினைந்து இறை தொழுவேன்.

– தம்பி சிவராசா–
குடும்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உளம்வாழும் அத்தானுக்கு

அன்னமிட்ட கைகளுக்கு, அன்பு செய்த கண்களுக்கு.
எம் தாய் எமைப் பிரிந்த வேதனைகள்
இன்னமும் தான் தீரவில்லை.
எனதருமை ஆனந்தத்தான்
நீயும் தான் ஏன் விட்டுச் சென்றனையோ!
நன்றாக இருந்தீர்களே நாம் கதைத்த நாட்களெல்லாம்
வென்றான் காலனவன்.
வேதனையில் கன்றாக நாமிங்கு கதறுகின்றோம்.
கேட்கலையோ! எப்பொழுதும் நிழலாய் இருப்பீர்கள்
என்றிருந்தோம்.
நீங்களோ எங்களை ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டு
மீளாத பயணம் சென்று விட்டீர்கள்.
மறக்காத வேதனையில் நாம் இங்கு வாழுகின்றோம்.
நீ அறியாய்!
உதவி என்று வந்தோர்க்கெல்லாம்
காலத்தால் அழியாத உதவிகளைச் செய்த
கருணைமிகுந்த கண்கண்ட தெய்வம் நீ
துன்பத்தில் துவள்வோர்க் கெல்லாம்
துணையாய் இருந்த தெய்வம் நீ
மனித குல மாணிக்கம் மாற்றுக்குறையாத தங்கம் நீ
கண்ணின் மணி போன்றவனே
கட்டியமுதே எம் கண்கள் குளமாக
நீ எங்கே சென்று விட்டாய்
வேலணை பெருங்குளம் முத்துமாரியம்மன் ஆலயத்தில்
எட்டாம் திருவிழா,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாலை வேளையிலே அம்பாள் மெல்ல, மெல்ல
ஆடி, ஆடி வரும் பொழுதினிலே,
நீயோ உன் அண்ணன்மார்
புடைசூழத் தீக்குளிப்பாய்
நெஞ்சம் உருகுதையா இன்னமும்
அதை நினைக்கையிலே.....
அன்றோ, நீ அக்கினியை வென்றாய்....
இன்றோ, அக்கினியிலே சங்கமமாகி விட்டாய்.
எனதருமை அத்தானே!
வலியில்லாத மரணம் அம்பாள் தந்த வரம் உனக்கு.
என்னுயிர் மைத்துனரே! என் உடன்பிறவா சகோதரனே!
உங்களது ஆன்மா சொர்க்கம் சென்று சாந்தியடைய
ஆசை மாமா குடும்பம் என்றென்றும் இறைவனை
எந்நாளும் பிரார்த்திப்போம்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

**மைத்துனர்கள்**
**சந்திரா, தவம், ராசன், ரவி**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு அத்தான்....

அன்பு என்ற சொல் மூன்றெழுத்திற்கு
அடுத்து அத்தான் என்ற நான்கெழுத்தும்
இணைந்ததே எங்கள் அன்பு அத்தான்.
எமது குடும்பத்தின் குலக்கொழுந்தாய்
தந்தைக்கு இணையாக ,
இன்ப துன்ப நிகழ்வின் தலைவனாய்
சுமை தாங்கியாய் நின்றவர் அன்பு அத்தான்.
ஆயிரத்து தொள்ளாயிரத்து எழுபதுகளில்
ஆருயிர் அக்காவிற்கு இணையராக,
மாமா மாமிக்கு நல் மருமகனாக ,
எங்கள் குடும்பத்தில் குடி புகுந்தார்.
அக்காவொடு எண்மரையும் சகோதரர்களாகவும்
நண்பர்களாகவும் எமையெல்லாம் வழிநடத்தியவர் அன்பு அத்தான்.
கொழும்பில் கடை நடாத்தி கொழும்பால் வந்தவுடன்
கொழும்பு அண்ணை என்று கால்பிடித்து
செல்லமாக கதைகள் பேசி தீன் பண்டங்கள் உண்டு.
நற்பட்டாடைகள் தந்திடுவார்.
வாழ்நாளில் மானம் மரியாதையுடன் வாழ
வழிகள் பல கூறி பாடங்கள் கற்பித்தார்
மாமா மாமி என்றால் தனிப் பிரியம்
மாமியாருடன் நான் யார் என்று சொல்லுங்கள் என்றால்
மாமியாரோ ஐங்கரன் மு என்று சரசங்கள் பொழிந்திடுவார்.
கூழ்காய்ச்சி சட்டியிலே மீன் உதிர்த்து
முள் எடுத்து அன்பாகக் குடிக்கச் சொல்வார்
தன்மனையாளை விட மாமியார்
திடகாத்திரம் கொண்டவர் என மெய்ச்சிடுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு தர நாற்பத்தைந்துடன்
இரண்டைக் கூட்டி மாமியாரின்
வயதைக் கணித்து இன்னும் ஐந்து ஆண்டுகள் மாமியார்
இல்லறம் காண்பார் .
இரண்டு தர பன்னிரெண்டு மணிநேரம்
மாமியாரின் கடைசிக் கடமைகளை
முடிக்க வேண்டும் என எண்ணிய அத்தான்.
மாமியாரின் கடமை முடிக்காது
சிவன்கழல் சேர்ந்து விட்டார்.
மாமியார் மருமகனின் சுகநலம்
குறைவு என எண்ணியே வாழ்ந்து கொண்டிருக்கிறார்.
விம்புகிறார் அழுகிறார் மரணச் செய்திகூட அவருக்கு மறைக்கப்பட்டது
ஓரிரு நாளிகைதான் எங்கள் அத்தான் மில் பூட்டி மாமர நிழலில்
கதிரையிலே சாய்ந்து களைப்பாறியவர் நெஞ்சில் வலி ஏற்பட
தங்கமகள் சுடுநீர் கொண்டு வர சிவன்கழல் சேர்ந்து விட்டார் .
அழுதென்ன புலம்பியென்ன அத்தான் வரமாட்டார்.
ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவாரோ
மானிலத்தில் என எண்ணி மனம் ஆறுகின்றோம்.



**–மைத்துனர்மார், மைத்துனிமார்–**

சந்திரன், இராமச்சந்திரன்,
யோகேஸ்வரி,தனபாலச்சந்திரன்,
பூபாலச்சந்திரன், பரமேஸ்வரி,
வளர்மதி, ரவிச்சந்திரன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் காணிக்கை....

திருநகர் பகுதியிலே பல்லாண்டு காலம் வசித்து வந்த எல்லோராலும் ஐங்கரன் மாமா என அழைக்கப்படும் திரு.குழந்தைவேலு ஆனந்தராசாவின் மரணச் செய்திகேட்டு மிகவும் மனவேதனை அடைந்தேன்.

நிறைந்த மனமும், ஆனந்தமான முகப்பொலிவும் கம்பீரமான தோற்றமும் உடையவர். சமய, சமூக சிந்தனைகளைக் கொண்ட இவர் கந்தசாமி ஆலயத்தில் வருடாந்த மஹோற்சவத்தில் ஆறாம் நாள் திருநகர் வாழ் மக்களின் உபயம், அன்றையதினம் உபயங்களை மிகவும் சிறப்பாக நிறைவு செய்து முடிப்பார். சமயப் பணிகளை செய்து வந்த அன்பர் ஆலயம் அதிரும்படி இறைவனைக் குளிரப்படுத்தும் வகையில் பஞ்சபுராணம் ஓதி மகிழ்விப்பார். அவ்வாறான பெரும் வள்ளலான ஆனந்தராசாவின் ஆத்ம சாந்தியடைய எல்லாம்வல்ல முருகப் பெருமானை வேண்டி அவரின் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபங்களையும் ஆறுதல்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**சிவஸ்ரீ. ஜெக ஜெயந்தக்குருக்கள்**
**கந்தசுவாமி தேவாலயம்,**
**கிளிநொச்சி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்புடன் மாமாவுக்கு....

ஒற்றையாய் பிறந்த அம்மாவுக்கு
ஆசை அண்ணனாய் இருந்து
மாமா என்ற உறவின் பாசத்தை
எமக்கு முதலில் தந்து
எங்கள் வீட்டு விசேசம் என்றால்
முதல் பஸ் முதல் ஆளாய் வீடு வரும்
எங்கள் மாமாவை இனி எங்கு காண்போம்.

**தங்கச்சி, பிள்ளைகள்**
**யோகராசா குடும்பம்**

## அன்பான அத்தானே!

மனதிற்கினிய அத்தான் என்றிருந்தோம்
மகிழ்வுடன் எம்மை அரவணைத்த அத்தானே!
முகமலர்ந்து உபசரித்து உறவு நிலை பேணுகின்ற
உத்தமனே உமையிழக்க என்ன பாவம் செய்தோமோ?
இன்பமென்ன துன்பமென்ன ஓடோடி வந்தீடுவீர்.
கன்னல் மொழி பேசிச் சிரிக்க வைத்து மகிழ்ந்திடுவீர்
மிடுக்காக நடை நடக்கும் மேன்மை எங்கே சொல்லையா
காலனுக்கு கண்ணில்லை கூற்று இது மெய்யோ?

**வசந்தி, விஜி, வசிலா**
**சின்னமாமா குடும்பம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அயலவர்கள், நண்பர்கள், மனம் நெகிழல்

உப்பிட்டவரை உள்ளளவும் நினை என்பது உண்மை ஒப்பில்லாக் குணம் படைத்த அன்பு மாமா எம் அயலினில் சின்னஞ்சிறார்களாய் நாம் பறந்த காலை மாமா மாமா என்று ஓடோடி வந்தோம். மாமா நீங்களும் உரிமை கொண்டு உறவாடினீர்கள் எமது மக்களையும் பேரப்பிள்ளைகளாய் அணைத்து வந்தீர்கள்.

இன்பத்திலும் துன்பத்திலும் எங்களோடு இருந்தீர்கள். அன்னமிட்ட கை எம்மையெல்லாம் அரவணைத்த கை பேரப்பிள்ளைகளை கண்டால் கொஞ்சி குலாவி தின்பண்டங்கள் கொடுத்தீடுவீர்.

தனக்கென வாழாது அண்டியே பழகிட்ட அயலவர்களையும் தன்னைப்போல் தாழாது வாழ வேண்டும் என்ற எண்ணம் கொண்டீர். நண்பர்களாய் நின்றோர்க்கு நயமும் செய்து நாளெல்லாம் இளமைத் துடிப்புடனே உழைப்பால் உயர்ந்தீர்கள். காலனவன் வந்த நேரத்தில் கூட நீங்கள் கடமையில் கண்ணாய் இருந்தீர்கள். மனைவி பிள்ளைகளையும் சுற்றம் உறவுகளுக்கும் எந்நேரமும் உழைத்தீர்கள்.

16.03.2020 மாலை கடமை முடிந்து மர நிழலில் இளைப்பாறிய வேளை கண்பட்டு போனது போல் காலனுக்கும் பொறுக்காமல் பாசக்கயிறுதனை வீசி பறித்துவிட்டான் மாமா பண்பான உங்கள் உயிரை. கதறி அழைக்கின்றோம் மாமா வந்து எம் துயர் துடையுங்கள் மாமா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வாங்கு வாழ்ந்து காட்டிய பெருமனிதன்....

2020.04.01

கிளிநொச்சி மாவட்டத்தின் பெருவிருட்சம் அமரர் குழந்தைவேலு ஆனந்தராசா ( ஐங்கரன் மாமா ) அவர்கள் கிளிநொச்சி மண்ணோடும் இந்த மாவட்ட மக்களின் வாழ்வியலோடும் இரண்டறக் கலந்து இறுதிவரை தன் உற்றார், உறவுகள், நண்பர்கள் என அத்தனைபேரையும் தாங்கி நின்ற ஓர் ஆலவிருட்சமாய் வாழ்ந்திருந்த மகத்தான ஒரு உறவை இன்று நாம் இழந்து நிற்கின்றோம்.

யாழ்ப்பாணத்தின் வேலணை மண்ணைத் தன் பூர்வீகமாகவும், கிளிநொச்சி மாவட்டத்தின் திருநகர் கிராமத்தை வாழ்விடாமாகவும் கொண்டு, நேர்மைமிகு வியாபாரியாக சிறந்ததோர் தொழில் முயற்சியாளனாக வாழ்ந்து மறைந்த ஐங்கரன் மாமா அவர்களின் வாழ்க்கைப் பாங்கு பலருக்கும் முன்னுதாரணமானது .

கிளிநொச்சி மாவட்டத்தில் புகழ் பூத்த வியாபார ஸ்தலமான "ஐங்கரன் ஸ்ரோர்ஸ்" மூலம் அனைவராலும் அறியப்பட்ட இவரை கிளிநொச்சி மண்ணை பிரதிபலிக்கக் கூடிய ஒரு தனி அடையாளம் என்றே கூறலாம். எனது பள்ளித்தோழனும் இந்த மண்ணுக்காக போராடி மடிந்த மாவீரருமான கப்டன் பாணனின் தந்தை என்பதன் மூலம் நிகழ்ந்த எனக்கும் அவருக்குமான அறிமுகம் ஓர் தந்தையின் ஸ்தானத்தில் வைத்துப் பார்க்கக்கூடிய நெருங்கிய உறவாகவே இறுதிவரை இருந்திருக்கிறது. வேலணை மண்ணிலிருந்து வந்து 1970களின் பிற்பகுதியில் கிளிநொச்சி மண்ணைத் தன் வாழ்விடமாக்கிக் கொண்டு பல்வேறு சமூக மட்ட அமைப்புக்களின் ஸ்தாபகராக , அங்கத்தவராக , பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் நிர்வாக சபை உறுப்பினராக, தன் ஊரிலுள்ள ஆலங்களின் அறங்காவலனாக, தேவார ஓதுவாராக மட்டுமன்றி தன் ஊரையும், உறவுகளையும் தமீழிழ விடுதலைப் போராட்டத்தையும் நேசித்த ஓர் தமிழ்த் தேசிய பற்றாளனாக, தனது இரண்டாவது மகனை மண்ணுக்காக ஈந்து நின்ற மகத்தான தந்தையாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று பல்வேறுபட்ட பரிமாணங்களில் ஐங்கரன் மாமா எம் ஒவ்வொருவர் மனங்களிலும் தனக்கென்றோர் தனியிடத்தை ஆழப்பதித்து போயுள்ளார் என்பது உண்மை.

எப்போதும் சிரித்த முகம், மனதைப்போலவே தோற்றத்திலும் பேணி வந்த வெண்மை , மனதாலும் பிறர்க்கு தீங்கு நினைக்காத கருணையுள்ளம் , நேரிய சிந்தனையாற்றல் , செயற்றிறன் ,பணிவு, இன , மொழிப்பற்று, சேவைநோக்கு என தனக்குத்தானே வரித்துக்கொண்ட வாழ்க்கைப் பாதையிலிருந்து சற்றும் புரளாது தான் வாழும் காலமெல்லாம் வாழ்வாங்கு வாழ்ந்திருந்தார் என்பதற்கு சிறியவர் , பெரியவர் , உறவினர் , நண்பர் என்ற பேதமின்றி எல்லோராலும் அவர் ஐங்கரன் மாமா என்றே அழைக்கப்பட்டு வந்தமையும், அச்சம் நிறைந்ததோர் அசாதாரண சூழலில் கூட திடீரென நிகழ்ந்த அவரது இறுதி நிகழ்வில் குழுமியிருந்த மக்கள் தொகையுமே சான்று. ஆலயப் பூசைகளிலும் , மரணச் சடங்குகளிலும் தேன் பாயும் கணீர்க் குரலால் அவர் இசைக்கும் தேவாரங்களை இனி எப்போதும் கேட்க முடியாது என்ற அங்கலாய்ப்பும் எம்மை கவலைக்குள்ளேயே ஆழ்த்துகிறது.

காலப்பெருவழியில் கரைந்து போகும் சாமானிய மனிதனாக அல்லாது ஊரோடும், உறவுகளின் உணர்வோடும் கலந்து , எல்லோர் உள்ளங்களிலும் நிறைந்திருந்து , வாழும் காலம் முழுதும் வாழ்வாங்கு வாழ்ந்திருந்த அமரரின் திடீர் மறைவால் துயருற்றிக்கும் அவரது மனைவி, பிள்ளைகள் , உறவுகளின் துயரில் நாமும் பங்கெடுப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்திபெறவும் எல்லாம் வல்ல எம் பெருமானின் பாதார விந்தங்களை பணிந்து நிற்கின்றேன்.

**சிவஞானம் சிறீதரன்**
மேனாள் பாராளுமன்ற உறுப்பினர்
யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம்
கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளிநொச்சி மண்ணின் பொக்கிசம் அப்பா ஆனந்தராசா....

ஆனந்தராசா அப்பா கடந்த 16.03.2020ஆம் திகயன்று எமைவிட்டுப் பிரிந்த செய்தி அறிந்து பேரதிர்ச்சியடைந்தோம். கிளிநொச்சி மண்ணிற்கு பெருமைசேர்த்த பெருமகன் பிரபல்யம் மிக்க மாவட்டம் ஒன்றில் வாழ்வதால் பல மனிதர்களுக்கு பெருமையாக இருக்கும். ஆனால் உண்மை நேர்மை அன்பு , பண்பு , கருணை உள்ள நல்ல மனிதர்கள் சிலரின் வாழ்வில் ஒட்டுமொத்த மாவட்டமும் பெருமையடைவதுண்டு.

ஆனந்தராசா அப்பாவின் வாழ்வும் அவ்வாறானதே அவர் கிளிநொச்சி மண்ணில் வாழ்ந்தமையால் பெருமைகொள்கிறது. தனக்காக வாளாது பிறருக்காகவே வாழ்ந்த உயர்ந்த உன்னதமான மனிதர் தமிழ் தேசத்தையும், விடுதலைப் போராட்டத்தையும் தலைமையையும் ஆழமாக நேசித்தவர். தன் மகன் விடுதலைக்காக போராடி கப்டன் பாணன் ஆக வித்தாகினான் என்பதில் பெருமை கொள்பவர். அப்பாவின் அனைத்துச் செயற்பாடுகளிலும் அம்மா பக்கபலமாக இருந்தார். அதேபோல அம்மாவின் அனைத்துச் செயற்பாடுகளுக்கும் அப்பா பக்கபலமாக இருந்தார். எனதும் எனது மனைவியாளதும் தனிப்பட்ட வாழ்விலும் மிகுந்த அக்கறை கொண்டவர். அப்பா மட்டுமன்றி அம்மா, மற்றும் அக்கா தங்கை உட்பட ஒட்டுமொத்த குடும்பமும் தங்கள் குடும்ப உறுப்பினர்களாகவே அரவணைத்தார்கள். வன்னியில் உருத்திரபுரம் மண்ணில் எமது திருமணம் நடைபெற்ற போது தாய் தந்தை ஸ்தானத்தில் இருந்து எம்மை ஆசீர்வதித்து எமது திருமணத்தை நடத்தி வைத்தார்கள்.

எனது அரசியல் பயணத்தில் 2010ஆம் ஆண்டில் தமிழ் தேசியக் கூட்டமைப்பிலிருந்து கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையில் தமிழ் தேசிய அரசியலை முன்கொண்டு செல்ல தொடங்கிய காலத்தில் எங்களது முடிவு சரியா, தவறா என்பதில் அவருக்கு குழப்பங்கள் இருந்த போதிலும் தன் பிள்ளையாக அரவணைப்பதில் எந்தக்குறையும் அவர் காட்டவில்லை. அவர்களது வீட்டுக்குச் சென்றால் எந்த வேலையாக இருந்தாலும் சாப்பிட்டு விட்டாயா? என்ற அன்பான கேள்வியும், ஓம் என்றாலும் சாப்பிடு என்ற கட்டளையும் அப்பாவும், அம்மாவும் என்மீது கொண்டுள்ள பாசத்திற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சான்று. என் மனைவி மீதான அக்கறை என்பது அப்பா அம்மா இருவருக்கும் பல மடங்கு அதிகமானது . அம்மா அப்பா போன்ற உறவுகள் வாழ்வில் கிடைப்பது என்பது வரம் என்றே சொல்வேன்.

நாட்கள் செல்லச் செல்ல எனது அரசியல் பாதையே சரியானது என்பதனை முழுமையாகப் புரிந்துகொண்டார். அது எனக்கு மிகுந்த ஆறுதளிக்கும் சம்பவமாக அமைந்தது. தன் வாழ்நாளில் விடுதலை சாத்தியமற்று போய்விட்டது என்ற கவலை அவரது மனதில் ஆழமாகப் பதிந்திருந்தது. மாவீரர் குடும்பங்கள் போரால் பாதிக்கப்பட்ட மக்கள், விழுப்புண் போராளிகள் ஆகியோரின் நிர்க்கதி நிலை கொண்டு கலங்கி நின்றார்.

யுத்த முடிவில் செட்டிக்குள முகாமிலிருந்து மீள குடியமர்ந்த மக்களுக்கு தன்னால் இயன்ற உதவிகளை பல வழிகளாலும் செய்து ஊரினதும் பிரதேசத்தினதும் முன்னேற்றத்திற்காக அரும்பாடுபட்டு உழைத்தவர். சமூகத்தில் ஒரு மனிதன் எப்படி வாழ வேண்டும் என்பதற்கு முன்னுதாரணமாக இலக்கணமாக தன் வாழ்நாள் முழுவதும் வாழ்ந்து காட்டிய பெருமைக்குரிய உன்னதமான மனிதர் 2009 எமது உரிமைப் போராட்டம் மௌனிக்கப்படாமல் இருந்திருந்தால் அப்பாவின் மறைவில் தேசத்தில் தலைமையின் மதிப்பளிப்புடன் இறுதி பயணம் நிகழ்ந்திருக்கும் அப்பாவின் மறைவு குடும்பத்தினருக்கு மட்டுமன்றி கிளிநொச்சி மாவட்டத்திற்கே ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் உறவுகளுக்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அப்பாவின் ஆத்மா அவர் ஆழமாக நேசித்த தேசத்திற்கு அங்கீகாரம் கிடைக்கும் போதே சாந்தியடையும். அதற்காக நாம் உறுதியுடன் உழைப்போம்.

**செ.கஜேந்திரன்**

பொதுச்செயலாளர்

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிலதிபர்

திருநகர் என்ற அழகான மேன்மையின் கிராமத்திலே 1970 இல் குடியேறினார். ஒருசில ஆண்டுகளின் பின்னர் எனது மேற்கு எல்லையிலே வசித்து வந்த அன்பான குடும்பம் தான் திருவாளர் குழந்தைவேலு ஆனந்தராசா குடும்பம். அயலவர்கள் எல்லோரோடும் அன்புரிமையோடு பழகும் சுபாவம் உடையவர்கள்.

ஐங்கரன் பல்பொருள் வாணிபம் , ஐங்கரன் மில் , ஐங்கரன் பப்படம் , வேல்முருகன் ராண்ஸ்போட் என பல்வேறு தொழில்களைப் புரிந்து பலர் வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிவகுத்தவர் தான் எல்லோராலும் ஆனந்தன் அண்ணை என அழைக்கும் தொழிலதிபர் ஆனந்தராசா.

ஆப்த நண்பனை ஆபத்தில் அறிவதென்பது ஆப்த வாக்கு யாருக்கு எப்ப என்ன உதவி தேவையோ அதனை நிறைவேற்றும் உயரிய பண்பினன். உற்ற இடத்து உதவும் பெரும் கருணாயாளன். அயலவர்கள்,நண்பர்கள், உறவினர்கள், வீடுகளில் நடைபெறும் நன்மையான தீமையான காரியங்களை தன்னுடைய வீட்டில் நடைபெறும் காரியங்கள் போல் செயற்படுவார்.

விசேடமாக மரணவீடு எங்கு நடைபெற்ற போதும் அங்கே எல்லாம் ஆனந்தராசா அண்ணனை காணமுடியும். சவத்தை சிவமாக பாவனை செய்து அபிடேகம் செய்த பின்னர் மாணிக்கவாசகப் பெருந்தகை சைவ உலகிற்கு ஆக்கி அளித்த திருவாசகம் என்னும் பெரும் வாசகத்திலுள்ள திருப்பொற்சுண்ணப் பாடல்கள் அனைத்தையும் புத்தகத்தைப் பாராமலே பண்ணுடன் பாடக்கூடிய பெருமை வாய்ந்தவர்.

“வெள்ளத் தனையது மலர் நீட்டம் மாந்தர் தம் உள்ளத்தனையது உயர்வு” என்ற தெய்வப் புலவரின் வாக்கிற்கிணங்க எப்பொழுதும் உயர்வான எண்ணங்களை உடையவராக இருந்தமையால் உயர்ந்த வாழ்வை வாழ்ந்து வந்தார். தனது ஐந்து பிள்ளைகளையும் உயர்கல்வி கற்க வைத்து அவர்களுக்கு என்ன என்ன வழங்கவேண்டுமோ,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்தையும் வழங்கி வைத்தார். எப்பொழுதும் உயர்வான எண்ணங்களைக் கொண்ட இவரின் புத்திரர்களான மோகனராசா , அரவிந்தராசா ஆகியோரை வெளிநாட்டில் தொழில் புரியவைத்து சிரேஷ்ட புத்திரி , கனிஸ்ட புத்திரி தட்சாயினி , தர்சினியையும் அரச துறையில் பணிபுரிய வழிசமைத்தார். கனிஸ்ட புத்திரன் குகராசா இந்துக்கல்லூரியில் கல்வி கற்க வைத்து பல்வேறு துறைகளிலும் சாதனையாளனாகி கற்று வரும்போது ஊருக்கு உழைத்திடல் யோகம் என உணர்ந்து காலத்தின் தேவை அறிந்து தொண்டாற்றப் புறப்பட்டு உலகம் அழியும் வரை மங்காப்புகளோடு மக்கள் மனதில் மங்கா இடம்பிடித்தார். இவ்வாறு வாழ்ந்து வரும் வேளையில் 16.03.2020 அன்று அவரது வாழ்வில் பேரிடித்தாக்கம் ஒன்று கனவிலும் எதிர்பாராத நிலையில் காலனவன் ஆனந்தண்ணையின் வாழ்வின் கணக்கினை முடித்துக்கொண்டான்.

கிளி மாவட்ட மக்கள் இவரின் செய்தி கேட்டு இடியோசை கேட்ட நாகம் போலாகிவிட்டனர். கிளி வைத்தியசாலை உத்தியோகத்தர்களும் மக்களும் ஒருசில மணித்துளிகளில் திரண்டு விட்டனர். உலகமே செய்தி கேட்டு கலங்கி விட்டது. அவரது உறவினர்கள் துடிதுடித்து நண்பர்கள் மனமுடைந்து கலங்கி நின்றனர். திருநகர் மக்கள் கந்தசாமி ஆலய ஆறாம் திருவிழாவில் முன்னின்று உழைக்கும் முன்னோடியை இழந்து விட்டோமே; உற்றவிடத்து உதவும் தொழிலதிபரை நிலையாகப் பிரிந்து விட்டோமே; என்று உள்ளம் உருகி கலங்கி அழுதனர். அவரது இறுதிக் கிரியைகளிலே கலந்து கொண்ட அலையென திரண்டு வந்த மக்கள் கூட்டத்தைக் கண்டு யாவரும் திகைத்து நின்றனர். பங்குனித்திங்கள் மூல நட்சத்திரத்தில் அமிர்த சித்தயோகத்தில் ஒருவருக்கும் துன்பம் கொடாது, பாயில் கிடவாமல் இறைவன் தன் பாதார விந்தங்களில் சேர்த்துக்கொண்டார். பஞ்ச பூதங்களாகிய பிருதுபி, அம்பு, வாயு, தேயு, ஆகாயத்தோடு அவரது உடல் சங்கமமாகிவிட்டது என்று யாவரும் ஆறுதலயடைய தில்லைக்கூத்தன் அருள்பாலிப்பாராக..

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

– செல்வராணி சோமசேகரம்பிள்ளை–



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







பேரப்பிள்ளைகளுடன்.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புள்ள ஆனந்தராசா அண்ணர்....

கிளிநொச்சி பெருநகரில் ஒரு நகராம் சிறுநகர் திருநகரில் ஒரு மகனாம் பெருமகனாய் வந்த மக்களுக்கொரு ராசாவாக வாழ்ந்தவர் அண்ணர் ஆனந்தராசா , அன்புராசா , அருமைராசா .

திருநகரில் ஆரம்பகால வாழ்வுதனில் பெருமைகொண்டவர். திருவெல்லாம் திரண்டிருந்தும் ஒருவரிடமும் வெறுப்பில்லாது பொறுப்போடு சிறப்பாக வாழ்ந்த செம்மல். ஒருநாள் கூட ஓய்வின்றி உழைத்தவர். தாய் பிள்ளை உறவுகொண்டு, எல்லோருக்கும் நல்லவராக வாழ்ந்த உத்தமசீலன் ஆனந்தராசா. எவர் இல்லமாக இருந்தாலும் இன்ப துன்ப நிகழ்வுகளிலெல்லாம் பங்கு கொண்டு பக்க பலமாய் ஆக்கபூர்வமாய் செயற்பட்டவர். தங்குதடையின்றி தாராள மனங்கொண்டு மாறாத தமிழ்ப்பண்பு கொண்டவர் " மண் பற்று மிக்க மாவீரன்" "பாணனை" தமிழ் மண்ணுக்குத் தந்தும் தன்னார்வம் மிக்க தொண்டாலும் ஒரு மா மனிதராகத் திகழ்ந்தவர் ஆனந்தராசா. அவர் அன்பு மனைவி வள்ளியம்மாவே அவரது பலம். வள்ளுவன் வகுத்த வாய்மை வழியில் வந்த வள்ளியம்மாவை இணையராக்கி இல்லறமாம் நல்லறம் கொண்டு, நல்ல பிள்ளைகளை, வல்லவர்களைப் பெற்றெடுத்து வாழ்வாங்கு வாழ வள்ளியம்மாவின் துணையோடு பள்ளிக்கு வைத்துப் பல்கலையும் கற்று, பெண் பிள்ளைகளும் பிறர் உதவியின்றி தன் காலையூன்றி தனித்துவமாக வாழவேண்டுமென்ற தத்துவத்தைப் பேணி வாழவைத்த பெருமை அண்ணர் ஆனந்தராசாவையே சாரும்.

சொல்லிவைத்த மாதிரி அவர் வாழ்வில் வள்ளியம்மையாரும் தன் கண், அவர் கணவரை கண்ணையும் இமை காப்பது போல தன் கண்ணாளனை தன்னலான மட்டும் தாயாகவே காத்து வந்தார். அக் காவலையும் மீறி இது காலத்தின் கட்டளை என காலன் கவர்ந்து சென்றான். செய்தி கேட்டு இதயம் நம்ப மறுத்தது. உண்மையென அறிந்தபோது உதறியது உடல், உள்ளம் பதறியது. கண்களில் கண்ணீர் பெருகியது .

சீவன் சீவித்த பின் சிவனை அடைகிறது. ஆன மட்டும் அவரில் தங்கியிருந்த ஆன்மாவாகி பசு, பதியிடம் சேருவது விதி.

ஒரு மனிதன் பிறந்தான் ,வாழ்ந்தான் , இறந்தான் என்பது எல்லா உயிர்களுக்கும் ஒன்றே. ஆனால் ஆறறிவு படைத்த மனிதன் மட்டுமே பகுத்தறிவு, மனிதப்பண்பு , பண்பாடு போன்றவற்றோடு வாழ வேண்டியவனாகிறான். இவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தனையையும் அந்த அன்பு அண்ணன் ஆனந்தராசாவிடம் கண்டேன். என்ன செய்வது;

"தூங்குவது போலும் சாக்காடு
தூங்கி விழிப்பது போலும் பிறப்பு" இது மேலோர் வாக்கு
"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்" - அண்ணன் ஆனந்தராசா அவர்கள் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தவர் தெய்வத்துள் வைக்கப்பட்டுள்ளார். உலகதத்துவமே இதுதான்.

"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்ற பெருமை படைத்தது இவ்வுலகு" நேற்றைய பொழுதுகளில் எம்மோடு இருந்து இன்பமாக மகிழ்ந்து உறவாடி, உணவு உண்டு, இன்புற்றிருந்த மனிதன் இன்றில்லை. அந்தப் பெருமைகொண்டது மனித உலக வாழ்வு. கண்ணன் கீதையும் அதைப் பற்றி இப்படிச் சொல்கிறது.

நீ எதைக்கொண்டு வந்தாய் அதை நீ இழப்பதற்கு !

நீ எதை எங்கிருந்து எடுத்தாயோ அது அங்கேயே கொடுக்கப்பட்டுள்ளது.

அவரின் இறுதிநாளுக்கு முதல் நாள் எதிர்பாராமல் சந்தித்த என்னை அழைத்து அன்போடு அனுசரித்து, அருகமர்த்தி, பருகத்தேனீர் தந்து, தேவையான அறிவுரைகள் தந்து, "தம்பி நல்லது செய் நல்லவனாக இரு" எனும் விவேகானந்தரின் வாய்மொழியில் வாழ்த்தினார்.

அவர் வேலணையில் பிறந்தாலும் கிளிநொச்சி வேலன் மீதும் மிகுந்த அன்பு கொண்டவர். வேலவன் திருவிழா திருநகர்த் திருவிழா ஆறாம் திருவிழா உபய காரராக கருணைமிகு கந்தனின் காலடியில் இருப்பார்.

அவரின் பிரிவால் மீளாத்துயரில் ஆழ்ந்து கிடக்கும் அவர் தம் அன்பு மனைவி, பிள்ளைகள் , மருமக்கள் , சகோதரர்கள் , மைத்துனர்கள், மைத்துனிகள் ஏனைய உற்றார் , உறவினர்களுடன் நாமும் மக்கள் சார்பாக எங்கள் கண்ணீர் சொறிந்து அவரின் ஆன்ம ஈடேற்ற தெய்வ வழிபாட்டில் கலந்துகொண்டு எல்லாம் வல்ல இறைவன் திருவடி வணங்கி வேண்டுகிறேன்.

**நா.வேலாயுதம்**

அகில இலங்கை சமாதான நீதவான்
பதிவு இல 19-08- வ.மா - தீ.மு -230
திருநகர் வடக்கு . கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயப் பணிகளில்........

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "கனிர்த்தமிழ் அருளோசை"

## அமரர் திரு.குழந்தைவேலு ஆனந்தராசா (ஐங்கரன் மாமா )

"நாளென ஒன்றுபோல் காட்டி உயிரீரும்
வாள துணர்வார்ப் பெறின் (குறள் - 334)

நாளென்னும் கால அளவு தன்னை ஒரு பொருளாளகக் காட்டி ஒவ்வொருவரின் உயிர் வாழும் கால அளவையும் அறுத்துக்குறைக்கும் வாள் என்பதை உணர்வுள்ளவர்கள் அறிவார் என்ற வள்ளுவன் வாக்கை உணர்ந்தவராகவே ஐங்கரன் ஐயா காணப்பட்டார். அவர் தனது செயற்பாடுகளில் தொய்வில்லாது ஒரு திடமான வாழ்வை ஓட்டிக்கொண்டு இருந்தவர் அவர் ஒரு தளராத உழைப்பாளி, தனது இறுதி மூச்சுவரை ஒரு பொறி எப்படி இயங்குகின்றதோ அப்படித்தான் இயங்கிக் கொண்டிருந்தார். பல வேளைகளில் அவரோடு மனம்மிட்டு பேசியும் இருக்கிறேன். அவர் ஒரு மாற்று பாதை (பைப் பாசு) அறுவைப்பண்டுவம் செய்தவர். கடைசியாக அவர் அரைக்கும் ஆலை வைத்திருந்தார். அங்கு தூசு துகள்கள் அவருக்கு ஏற்புடையதாகவிருக்கவில்லை. ஆனாலும் பலர் தமது முதுமைக்காலத்தில் பிள்ளைககள் சொல்வதை , நண்பர்கள், உறவுகள் சொல்வதை ஏற்றுக்கொள்வதில்லை. அதிகம் பெற்றோர் பிள்ளைகளுக்கு தாங்கள் இடஞ்சலாக இருக்கக் கூடாதென்பதில் சற்றுப் பிடிவாதத்தைக் காட்டத்தான் செய்கின்றனர். இதைப் பிடிவாதம் எனவும் கூறமுடியாது தான் ஏனெனில் இன்று தங்கள் தேவைகளை நிறைவுசெய்ய பல குடும்பங்கள் இன்னல் படுவது மாத்திரம் அல்ல அவர்களுக்கு தங்கள் வேலைகளையே செய்ய காலம் போதாமல் உள்ளது என்பதே உண்மை.

இவர் ஒரு பல்துறை விற்பன்னராக விளங்கியவர். சொந்த ஊர்திகள் வைத்திருந்தவர். இறுதிவரை வேளாண்மை செய்து கொண்டிருந்திருந்தார். இதன் மூலமாகப் பலருக்கு வேலைவாய்ப்புக்களையும் வழங்கியவர். எல்லோருடனும் அன்பாகவும், பண்பாகவும் பழகுபவர். மற்றவர்களின் செயற்பாடுகளிற்காக அவர்களை பாராட்டாமலும் இருக்க மாட்டார். இன்று பலரிடம் இப்பண்பு காணப்படுவதில்லை.

"உலகத்தோ டொட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்" (கு 140)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்ந்தோர் என்று கூறப்படும் சான்றோர்களோடு உறவாடும் வாழ்க்கை கல்வியை (பட்டறிவு) கல்லாதவர் பலபல உயர் பட்டங்களை (கல்வி) பெற்றவர் ஆயினும் கல்லாதவரே என்பார் வள்ளுவனார். அந்த வகையில் இவரும் ஓர் உயர்ந்த மனிதராக பலரும் பாராட்டும் படி வாழ்ந்து காட்டியவர். கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாக தன்னார்வக் குமுகாயத் தொண்டராக செயற்பட்டவர். கிளிநொச்சி மாவட்டம் மட்டும் என்றில்லாது தனது சொந்த ஊரான வேலணை, துணைவியாரின் ஊரான பருத்தித்துறை போன்ற இடங்கள், ஏனைய யாழ் மாவட்டப் பகுதிகள், வவுனியா போன்ற இடங்களில் ஒருவரின் இறுதிச் சடங்கு (கிரியை) நிகழ்வில் கலந்து கொள்ளத்தவறுவதில்லை. இவரைத் தெரிந்தவர்கள் எங்கு இருந்தாலும் தொலைபேசியில் அழைத்தாலே சென்று குளிப்பாட்டலிலிருந்து தேவார, திருவாசக, சுண்ணப்பாட்டுக்கள் பாடி, அங்குகுழுமி இருப்பவர்களை ஆற்றுப்படுத்தத் தவறுவதில்லை. இதற்காக எந்தக்கொடுப்பனவையும் கைநீட்டி வாங்காதவர். நேர்மை, கண்ணியத்துடன் நடந்துகொள்பவர். நான் அறிந்தளவில் 20 ஆண்டுகளிற்கு மேலாக இத்தன்னார்வத்தொண்டைச் செய்து வந்த ஒரு பண்பாளரை , நேர்மையாளரை, தமிழர் தம் மொழியை ,பண்பாட்டை, பழக்கவழங்கங்களை , ஒழுக்கவியலை பேணிக்காத்து வழி நடத்துகின்ற இவர்களை இவர்களின் அகவை முதிர்ச்சியிலாவது பாராட்ட வேண்டும். அவர்கள் தங்கள் செயற்பாடு பெறுமதிமிக்கதென்று கடைசிக்காலத்தில் மனநிறைவோடு வாழ்வார். நம்மாவட்ட, பைந்திர (பிரதேச) செயலகம், சபை என்பன அதிக கவனம் செலுத்த வேண்டும். இவர்களைப் புறக்கணியாதீர். ஊரக மட்டத்தில் இவர்களை இணங்கண்டு , ஊரக (கிராம) அலுவலர் ஊடாக குறித்த ஆளுகைப் பகுதிகளுக்கு தெரிவிக்க முடியும்.

இலங்கை குமரித்தமிழ்ப் பணிமன்றம் 2013 இல் தொடக்கப்பட்ட போது திரு.கு.ஆனந்தராசா அவர்களுக்கும் அமரர் திருவாட்டி தே.நாகம்மா அவர்களுக்கும் "கணீர்த் தமிழ் அருளோசை" என்ற பட்டம் வழங்கி பொன்னாடை போர்த்தி நன்மதிப்பு (கௌரவிப்பு) செய்தோம். இங்கு பல சங்கங்கள், மன்றங்கள், கழகங்கள் இருக்கின்றன. இவர்களும் இவற்றை செயற்படுத்தலாம்.

"வசையென்ப வையத்தார்க் கெல்லாம் இசையெனும்
எச்சம் பெறாஅ விடின்" (கு 238)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகில் பிறந்தவர் ஏதோ ஒரு வகையில் புகழை (இசை) எச்சம் (மிச்சம்) பெறவேண்டும். இல்லையேல் அவர் வசை (இழுக்கு) க்கு உரியவர்கள் என்பார் வள்ளுவனார்.

ஐங்கரன் ஐயா புகழிற்கு உரியவர்தான் என்பதை இவரது இறுதிநாள் நிகழ்வில் கலந்து கொண்ட ஆயிரக்கணக்கானவர்கள் உறுதி செய்ய போதுமானதாகும்.

"தக்கார் தகவிலார் என்பது அவரவர்
எச்சத்தால் கொள்ளப் படும்" (கு 114)

ஒருவர் தகுதியானவரா இல்லையா என்பது அவர்கள் விட்டுச்செல்லும் புகழ் என்னும் எச்சத்தைப் பொறுத்தேகும்.

எப்படி தன் கடைசி நாட்கள் இருக்க வேண்டும் என்பதையும் எப்படி தம் உலக வாழ்வு முடிவுற வேண்டும் என்றும் நினைத்தாரோ அதில் ஒரு அணு அளவும் விலகாது இறவாப் புகழாழராய் மறைந்து விட்டார். மறையவில்லை ஒளிர்ந்திருந்து பார்க்கின்றார். எப்படியும் வாழலாம் என்பதை விடுத்து இப்படித்தான் வாழ வேண்டும் என்பதை பலருக்கும் உம் செயலால் கற்பித்துள்ளீர்.

"அன்றறிவாம் என்ன தறம்செய்க மற்றது
பொன்றுங்கால் பொன்றாத் துணை" (36)

அறச்செயல்களைப் பின்னே செய்லாம் என்றில்லாமல் உடனே செய்தல் வேண்டும். அதுவே இறக்கும் இறவாத் துணை செய்யும்.

இறவாப் புகழாழரான ஐங்கரன் ஐயாவின் இழப்பால் துயற்றிருக்கும் அவரது அன்புத்துணைவியார் , பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உடன்பிறப்புக்கள் , உற்றார், உறவினர், நண்பர்கள் ஆறுதலடைந்து அமைதிபெற வேண்டுகின்றேன்.

அமைதி ! அமைதி! அமைதி !

**கலைவல்லார் ( கலாபூசணம் )**

**நா.வை.மகேந்திரராசா ( குமரிவேந்தன் )**

நிறுவுநர் இலங்கைக் குமரித் தமிழ்ப் பணிமன்றம்

வெற்றி (யெயந்தி) நகர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோர்ந்து தவிக்கும் சொந்தங்களோடு சேர்ந்து துயர் பகிர்வோம்

ஐங்கரன் மாமா என்றால் அறியாதோர் யாருமில்லை
தம் கரம் கொண்டே வாழ்ந்த தரணியே போற்றும் செம்மல்
இங்கிவர் பணிகள் போற்றி இக்கிராமமே வாழ்த்தும் என்றும்
சங்கரன் புகழைப்பாடி சாதனை வென்ற மாந்தர்
தேசியத்தில்  பற்றுறுதி தமிழ் மாவீர மாமனிதர்
நேசிக்கும் மனிதநேயம்.
நெஞ்சார்ந்த அரவணைப்பு – இவர்
பேசிய பொழுதுகளோ அழியாத கோலங்கள்.
வாசிக சாலையதும்  பேசும் இவர்புகழை.
துன்பம் துயரம் என்றால் துடித்து ஓடிப் போய் விடுவார்.
என்றும் இவர் ஓய்வதில்லை.
எவர்க்கும் அடிபணிந்ததில்லை.
நன்றான தந்தையென பிள்ளைகளை
நல்ல நிலையில் வாழ வைத்தார்.
அன்பான இல்லத்தில் இனிய துணையோடு
அக மகிழ்ந்து வாழ்ந்து வந்தார்.
வெள்ளையுடை வெள்ளை உள்ளம்
வேசமில்லா நேர் பேச்சு
உள்ளம் திறந்து உண்மையே பேசுபவர்.
உத்தமனாய் வாழ்ந்த மகான்
கள்ளமில்லாத நல் நெஞ்சம்
கருணைமிகு வள்ளல் இவர் .
வெள்ளமென திரண்ட மக்கள்
வேதனையில் தவித்து நின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யும் தொழிலே தெய்வமென வாழ்ந்திருந்தார்.
செய்ந்நன்றி மறவாத செம்மலாய் திகழ்ந்திருந்தார்.
உய்யும் வகை தெரிந்து உண்மையாய் உழைத்த மகான்
வையகம் போற்றிடவே வானுறையும்
தெய்வத்துள் உறைந்தார் நன்று.
பார்வையில் பாசம் பொங்கும் .
வார்தையோ ஈர்க்கும் நெஞ்சை,
போலிப் போர்வையோ இல்லா வாழ்க்கை
யார்க்குமே அஞ்சா நேர்மை .
ஊரெல்லாம் போற்ற வாழ்ந்த ,
உத்தமன் பாதம் தன்னில் ,
வார்த்திட்டோம் கண்ணீர் மாலை ,
வாழ்த்தினோம் பாமாலையாக.
நாலுபேர் போற்ற நல்ல பெரு மனிதராக ,
ஆலய பணிகளோடு அறப்பணி பலதும் ஆற்றி
சீலமாய் வாழ்ந்த பேரார்.
வேலையில் கண்ணாய் நின்றே
ஆலமர விருட்சம் போல
விழுது விட்டு உயர்ந்த காளை
காலமாம் காலனாகி
கணத்தினுள் கவர்ந்து சென்றான்
ஆறுவோம் நாமுமிங்கே
அரனடி சேர்ந்தார் நன்றே.

– கலா கணேஷன்–



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதல் வணக்கத்துக்குரியவன் இறைவன் ஐங்கரன் எம் முதல் மரியாதைக்குரியவர் இந்த மாமா ஐங்கரன் .....

வெள்ளைவேட்டி , நரைத்த தலை, ஒளிவீசும் பார்வை,
அத்தெய்வத்தின் நடமாட்டத்தை எங்குகாண்போம் இனி?....
இரவோடு வந்த செய்தி கனவாகி விடாதா?
என்று கண்மூடித்தூங்கினோம்.
விடிந்த பின்பும் அது நனவாகி விட்டது மாமா.........
நன்மை என்ன ? தீமை என்ன ? ஏழை என்ன? வசதி என்ன?
எங்கும் உங்கள் சேவை நிறைந்திருந்ததே......
ஊர் கூடி அழுகின்றது மாமா! உங்கள் இழப்பிற்காய்...
உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசும் வஞ்சகர்கள்
நிறைந்திருக்கின்ற இவ்வுலகில்
"பாயிற் கிடவாமல் பாவியேன் என்று அழைக்காமல்"
"நோயுற்று இராமல் நொந்து மனம் வாடாமல்
சீக்கிரம் இறைவனடி சேர்ந்ததன் காரணம்
நாவசைத்து இறைபாமாலை பாடியதன் பயன் என்றே
நாம் நினைகின்றோம் மாமா......
இருந்தும் சுயநலம் பிடித்த எங்களால்
உங்கள் இழப்பைத் தாங்க முடியவில்லை
எங்கள் துன்பத்தில் நீங்கள் பங்கு கொண்டு
ஆற்றிய சேவைகள், எமக்குக் கூறிய ஆறுதல்கள்,
அறிவுரைகள் எதையுமே எங்களால்
மறற முடியவில்லை மாமா.....
ஆனாலும், நல்லவன் ஒருவன் பிறந்தான்,
நல்லதைச் செய்தான், நல்லபடி வாழ்ந்தான்.
அவனது இறப்புக்கூட நல்லதாகவே அமைந்தது என்ற செய்தி
கிளிநொச்சி மாவட்டத்தில் இன்று
பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்டுள்ளது
என்ற ஆறுதலோடு..........

**ராசன் சுரமஞ்சரி**
**ஜெயந்திநகர், கிளிநொச்சி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்று காண்போம் இனி

ஐங்கரன் மாமா என பாசமாக அழைக்கப்பட்டு எம்முள் ஒருவராக இருந்த குழந்தைவேலு ஆனந்தராசா எமக்கெல்லாம் நிழல் தந்த விருட்சம் சரிந்த செய்தி அறிந்து பேரதிர்ச்சி அடைந்தோம் இந்தச் செய்தியை ஏற்க எமது மனங்கள் மறுத்தது. பிறப்பவரெல்லாம் இறப்பது உறுதியென ஏற்றுக்கொள்ள வேண்டியுள்ளது.

அன்புள்ளம் கொண்ட இவர் அறநெறி வழியில் வாழ்ந்து மக்கள் மனதில் நீங்காத இடம்பெற்றவர் . உதயநகர் அற்புத விநாயகர் மீது தீராத காதல் கொண்டு ஆலய புனரமைப்பிற்கு அத்திவாரம் இட்டு அழகானதாக உருவாக்கி மகா கும்பாபிஷேகம் வரை முன்னின்று உழைத்து மனநிறைவு கண்டார். இப்பணிக்காக தன் உடல் ஆவி அனைத்தையும் ஈந்து இறைவனடி சேர்ந்தார்.

எவர் இறந்தாலும் உடன் ஓடி வந்து ஆறுதல் கூறி, அவரது இறுதிக் கிரியை வரை தேவார, திருவாசகம், திருப்பொற்சுண்ணம் பாடிய கம்பீரக்குரல் இன்னும் காதில் ஒலிக்கிறது. இப்பணிக்கு யார் வருவார்? எவர் இருப்பார்? என ஏங்குகிறோம். எங்கு காண்போம் இனி.

பார்புகழ வாழ்ந்து பரமனடி சேரும் பாக்கியம்
யார் வாழ்விலும் வாராது எவருக்கும் கிட்டாது
இவர் வழியில் நாம் நின்று உழைப்பதே
நாம் செய்யக்கூடிய பிரதியுபகாரமாகும்
ஐங்கரன் உள்ளவரை ஆனந்தராசா நாமம் வாழும்

**மு.சிவஞானசுந்தரமூர்த்தி,**
செயலாளர்,
அற்புத விநாயகர் ஆலயம்,
உதயநகர், கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்தலின் தடம் நீங்கள்....

காலம் தன் கடமையிலா ............???
மரணம் மனிதங்களின்
முற்றுப்புள்ளியுடன் முண்டியடித்து
உறவாடுகின்றதா........???
நேற்றைய நிஜங்கள்
இன்றைய நினைவுகளாக......
அந்த வரிசைகளில்
ஐங்கரன் ஐயாவும்
திருநகரில் இவர் தான்
வயதுபோனாலும் வாலிபனாய் சூழன்றவர்.
இளவல்களுக்கு இவர் ஓர் எடுத்துக்காட்டு.
எப்போதும் சுறுசுறுப்பே இவர் பாட்டு.
மண்ணுக்காய் மகனை ஈர்ந்த தந்தை
மக்களுடன் மகிழ்வாய் இருக்கும் விந்தை
நேராய் பேசுவார் நேசமுடன் பூசுவார் அன்பை,
யாராயிருந்தாலும் நேர்மை.
சோர்வாய் இருக்காமல் உழைப்பில் இவர் கூர்மை.
இருக்குமிடத்தில் சுற்றும் ஒரு கூட்டம்.
ஐங்கரன் மாமா டேய் என்றால் எடுக்கும் ஓட்டம்
வாலிபருக்குத் தோழனாய், வயதானவருக்கு நேசனாய்,
குடும்பத்தின் நல்ல தலைவனாய்,
ஊரில் மகத்தான நல்ல மனிதனாய்,
நினைவுகளில் என்றும் வாழும் புனிதனாய்,
நீங்கள் வாழ்தலின் தடம்.
அமைதியாய் உறங்குங்கள் !
ஐங்கரனே போற்றி ! போற்றி!!

**உங்கள் நேசத்திற்குரிய**
**அரிதாஸ் பிரியன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீங்காத நினைவுகளோடு.....

ஐங்கரன் ஐயா வீடு எல்லோருக்கும் ஆறுதல் மடம்.
கனிவான உரையாடல், உபசரிப்பு, கலகலப்பு .
ஓங்கி ஒலிக்கும் உற்சாக குரல் என்றும் ஓயாத முயற்சியாளர்.
அவர் மனைவி பிள்ளைகள் குடும்பமாக
எம்மை அன்பில் ஆழ்த்திய நண்பர்கள்.
அவரின் இறுதிப் பயணத்தில் வழியனுப்ப முடியாத பாவியாக
புலம்பெயர் நாட்டிலிருந்து புலம்புகின்றேன்.
விண்ணிலிருந்தாலும் எங்கள் எண்ணத்தில் நீங்கள்
மின்னுவீர்கள் அஞ்சலிக்கின்றோம்.

**– சித்திரன்–**

## மறக்க முடியுமா உங்களை

தாயகத்தில் கிளிநொச்சி திருநகரில் வசித்து வந்தவரும் ஐங்கரன் அரைக்கும் ஆலை உரிமையாளருமான ஐங்கரன் ஐயா அளப்பெரும் தியாகங்கள் நிறைந்த. தேசத்தில் பற்றுறுதியும் தேசப்பற்றாளரும், அன்புரிமையோடு உபசரிக்கும் நற்பண்பும் ஒருங்கே அமையப்பெற்றவர். பெரியோர் முதல் சிறியோர் வரை ஐங்கரன் ஐயா என அழைத்து பழகுகின்ற பேரன்பிற்கும் மரியாதைக்கும் உரித்தான ஐங்கரன் ஐயா அவர்கள் இவ்வாழ்வை துறந்தார் என்ற துயரச் செய்தி எம்மை மிகுந்த கவலையில் ஆழ்த்தியுள்ளது. அவரது ஆத்மா அமைதிக்கும், அவரது சேவைக்கும் தலைவணாங்கிக் கொள்கின்றோம். அன்றைய நீண்ட பயணம் ஒன்றில் நீங்காத நினைவுகளோடு நாம்....

**– றெனோ குடும்பம்–**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பொற்சுண்ணம்

*திருச்சிற்றம்பலம்*

முத்துநல் தாமம்பூ மாலைதூக்கி
முளைக்குடந் தூபநல் தீபம்வைம்மின்
சத்தியும் சோமியும் பார்மகளும்
நாமக ளோடுபல் லாண்டிசைமின்
சித்தியும் கௌரியும் பார்ப்பதியுங்
கங்கையும் வந்து கவரிகொண்மின்
அத்தன் ஐயாறன்அம் மானைப்பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 1

பூவியல் வார்சடை எம்பிராற்குப்
பொற்றிருச் சுண்ணம் இடிக்கவேண்டும்
மாவின் வடுவகி ரன்னகண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்
கூவுமின் தொண்டர் புறநிலாமே
குனிமின் தொழுமின்னெங் கோனெங்கூத்தன்
தேவியுந் தானும்வந் தெம்மையாளச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே. 2

சுந்தர நீறணிந் தும்மெழுகித்
தூயபொன் சிந்தி நிதிபரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டியெங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தரர் கோன் அயன் தன்பெருமான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆழியான் நாதன்நல் வேலன் தாதை
எந்தரன் ஆளுமை யாள்கொழுநற்
கேய்ந்த பொற்சுண்ணம் இடித்துநாமே. 3
காசணி மின்கள் உலகையெல்லாங்
காம்பணி மின்கள் கறையுரலை
நேசமுடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்று வாழ்த்தித்
தேசமெல் லாம்புகழ்ந் தாடுங்கச்சித்
திருவேகம் பன்செம்பொற் கோயில் பாடிப்
பாசவினையைப் பறித்துநின்று
பாடி பொற்சுண்ணம் இடித்துநாமே 4

அறுகெடுப் பார்அய னும்அரியும்
அன்றிமற் றிந்திர னோடமரர்
நறுமுறு தேவர் கணங்களெல்லாம்
நம்மிற்பின் பல்ல தெடுக்கவொட்டோம்
செறிவுடை மும்மதில் எய்தவில்லி
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடி
முறுவற்செவ் வாயினீர் முக்கணப்பதற்கு
ஆடற்பொற் சுண்ணம் இடித்துநாமே. 5

உலக்கை பலஓச்சு வார்பெரியர்
உலகமெ லாம்உரல் போதாதென்றே
கலக்க அடியவர் வந்துநின்றார்
காண உலகங்கள் போதாதென்றே
நல்ல அடியோமை ஆண்டுகொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடத்தந்த
மலைக்கு மருகனைப் பாடிப்பாடி
மகிழ்ந்து பொற்சுண்ணம் இடித்துநாமே 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூடகந் தோள்வளை ஆர்ப்ப ஆர்ப்பத்
தொண்டர் குழாமெழுந் தார்ப்ப ஆர்ப்ப
நாடவர் நந்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
நாமும் அவர் தம் ஆர்ப்ப ஆர்ப்பப்
பாடகம் மெல்லடி யார்க்குமங்கை
பங்கினன் எங்கள் பராபரனுக்கு
ஆடக மாமலை அன்னகோவுக்கு
ஆடப் பொற்சுண்ணம் இடித்துநாமே. 7

வாள்தடங் கண்மட மங்கைநல்லீர்
வரிவளை ஆர்ப்பவண் கொங்கைபொங்கத்
தோள்திரு முண்டம் துதைந்திலங்கச்
சோத்தெம்பி ரானென்று சொல்லிச்சொல்லி
நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங்காட்டி
நாயிற் கடைப்பட்ட நம்மையிம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப்பாடி
ஆடப்பொற்சுண்ணம் இடித்தநாமே. 8

வையகம் எல்லாம் உரலதாக
மாமேரு என்னும் உலக்கை நாட்டி
மெய்யெனும் மஞ்சள் நியையஅட்டி
மேதகு தென்னம் பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப்பாடிச்
செம்பொன் உலக்கை வலக்கைபற்றி
ஐயன் அணிதில்லை வாணனுக்கே
ஆடற்பொற் சுண்ணம் இடித்துநாமே. 9



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தணி கொங்கைகள் ஆடஆட
மொய்குழல் வண்டினம் ஆடஆடச்
சித்தஞ் சிவனொடும் ஆடஆடச்
செங்கயற் கண்பனி அடஆடப்
பித்தெம் பிரானொடும் ஆடஆடப்
பிறவி பிறரொடும் ஆடஆட
அத்தன் கருணையொடாட ஆட
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே 10

மாடு நகைவாள் நிலாவெறிப்ப
வாய்திறந் தம்பவ ளந்துடிப்பப்
பாடுமின் நந்தம்மை ஆண்டவாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப்பாடித்
தேடுமின் எம்பெரு மானைத்தேடி
சிங்கங் களிபப்த் திகைத்துத்தேறி
ஆடுமின் அம்பலத் தாடினானுக்கு
ஆடற்பொனற் சுண்ணம் இடித்துநாமே 11

மையமர் கண்டனை வானநாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன்தன்னை
ஐயனை ஐயர்பி ரானைநம்மை
அகப்படுத் தாட்கொணடருமைகாட்டுப்
அகப்படுத் தாட்கொண் டருமைகாட்டும்
பொய்யர்தம் பொய்யனை மெய்யர் மெய்யைப்
போதரிக் கண்ணிணைப் பொற்றொடித்தோள்
பையர வல்குல் மடந்தைநல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 12



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்னிடைச் செந்துவர் வாய்க்கருங்கண்
வெண்நகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை ஆரமு தெங்களப்பன்
எம்பெருமான்இம வான்மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன்தகப்பன்
தமையனஎம் ஐயன் தாள்கள் பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கைநல்லீர்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே 13

சங்கம் அரற்றச் சிலம்பொலிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலையாடச்
செங்கனி வாயித ழுந்துடிப்ப
சேயிழை யீர்சிவ லோகம்பாடிக்
கங்கை இரைப்ப அராஇரைக்குங்
கற்றைச் சடைமுடி யான்கழற்கே
பொங்கிய காதலிற் கொங்கைபொங்கப்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே. 14

ஞானக் கரும்பின் தெளியைப்பாகை
நாடற் கரிய நல்த்தைநந்தாத்
தேனைப் பழச்சுவை ஆயினாசைச்
சித்தம் புகுந்துதித் திக்கவல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டுகொண்ட
கூத்தனை நாத்தமும் பேறவாழ்த்திப்
பானல் தடங்கண் மடந்தைநல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவகை நாமும்வந் தன்பர்தம்மோடு
ஆட்செயும் வண்ணங்கள் பாடிவிண்மேல்
தேவர் கனாவிலுங் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ்செல்வச்
சேவகம் ஏந்திய வெல்கொடியான்
சிவபெரு மான்புரஞ் செற்றகொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப்பாடிச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே. 16

தேனக மாமலர்க் கொன்றைபாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடைமேல்
வானக மாமதிப் பிள்ளைபாடி
மால்விடை பாடி வலக்கையேந்தும்
ஊனக மாமழுச் சூலம்பாடி
உம்பரும் இன்பரும் உய்யஅன்று
போனக மாகநஞ் சுண்டல்பாடிப்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே. 17

அயன்தலை கொண்டுசெண் டாடல்பாடி
அருக்கண் எயிறு பறித்தல்பாடிக்
கயநதனைக் கொன்றுரி போர்த்தல்பாடிக்
காலனைக் காலால் உதைத்தல் பாடி
இயைந்தன முப்புரம்எய்தல் பாடி
ஏழை அடியோமை ஆண்டுகொண்ட
நயந்தனைக் பாடிநின் றாடியாடி
நாதற்குச் சுண்ணம் இடித்துநாமே 18



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்ட மலர்க்கொன்றை மாலை பாடி
மத்தமும் பாடி மதியும் பாடிச்
சிட்டர்கள் வாழுந் தென் தில்லை பாடிச்
சிற்றம் பலத்தெங்கள் செல்வம் பாடிக்
கட்டிய மாசுணக் கச்சை பாடிக்
கங்கணம் பாடிக் கவித்த கைம்மேல்
இட்டு நின் றாடும் அரவம் பாடி
ஈசற்குச் சுண்ணம் இடித்தும் நாமே 19

வேதமும் வேள்வியும் ஆயினார்க்கு
மெய்ம்மையும் பொய்ம்மையும் ஆயினார்க்குச்
சோதியு மாய் இருள் ஆயினார்க்குத்
துன்பமுமாய் இன்பம் ஆயினார்க்குப்
பாதியுமாய் முற்றும் ஆயினார்க்குப்
பந்தமுமாய் வீடும் ஆயினாருக்
ஆதியும் அந்தமும் ஆயினாருக்(கு)
ஆடப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே 20



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டினத்துப் பிள்ளையார் அருளிய உடற்கூற்று வண்ணம்

ஒருமட மாது மொருவனு மாகி
இன்ப சுகந்தரு மன்பு பொருந்தி
புணர்வு கலங்கி வொழுகிய விந்து
வூறு சுரோணித மீது கலந்துட

பணியுலர் பாதி சிறுதுளி மாது
பண்டியில் வந்து புகுந்து திரண்டு
பதும மருண்டு கடமி மிதென்று
பார்வை மெய்வாய்ச் செவி கால்கை ளென்ற

உருவமு மாகி யுயிர்வளர் மாத
மொன்பது மொன்று நிறைந்து மடந்தை
யுதர மகன்று புவியில் விழுந்து
யோகமும் வாரமு நாள மறிந்து

மகளிர்கள் சேனை தரவணை யாடை
மண்டப வுந்தியு தைத்து கவிழ்ந்து
மடமடியில் கொங்கை யமுத மருந்தி
யோரறி வீரறி வாகி வளர்ந்து

ஒளிநகை யூறநகை விதழ்மட வாரு
முவந்து முகந்திட வந்து தவழ்ந்து
மடியி லிருந்து மழலை மொழிந்து
வாவிரு போவென நாமம் விளம்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடைமணி யாடை யரைவட மாட
உண்பவர் தின்பவர் தங்களொ டுண்டு
தெருவில் இருந்து புழுதி யளைந்து
தேடிய பாலரொ டோடி நடந்து
அஞ்சு வயதாகி விளையாடியே

உயர்தரு ஞான குருவுப தேச
முத்தமிழின் கலையுங் கரைகண்டு
வளர்பிறை யென்று பலரும் விளம்ப
வாழ்பதி னாறு பிராயமும் வந்து

மயிர்முடி கோதி யறுபத நீல
வண்டிமிர் தண்டொடை கொண்டை புனைந்து
மணிபொ னிலங்கும் பணிக ளணிந்து
மாமயில் போலவர் போவது கண்டு

மதன சொரூப னிவனன மோக
மங்கையர் கண்டு மருண்டு திரண்டு
வரிவிழி கொண்டு கழிய வெறிந்து
மாமயில் போலவர் போவது கண்டு

மனது பெறாம லவர்பிற கோடி
மங்கல செங்கல சந்திகழ் கொங்கை
மருவ மயங்கி யிதழமு துண்டு
தேடிய மாமுதல் சேர வழங்கிட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு முத லாகி முதுபொரு ளாய்
இருந்த தனங்களும் வம்பி லிழந்த
மதன சுகந்த விதன மிதென்று
வாலிப கோலமும் வேறு பிரிந்து

வளமையும் மாறி இளமையும் மாறி
வன்பல் விழுந்திரு கண்க ளிருண்டு
வயது முதிர்ந்து நரைதிரை வந்து
வாத விரோத குரோத மடைந்து
செங்கையி னில் ஓர் தடியு மாகியே.

வருவது போவ தொருமுது கூனும்
மந்தியெனும்படி குந்தி நடந்து
மதியு மழிந்து செவிதிமிர் வந்து
வாயறி யாமல் விடாமல் மொழிந்து

துயில்வரு நேர மிருமல் பொறாது
தொண்டையு நெஞ்சு முலர்ந்து வறண்டு
துகிலு மிழந்து கணையு மழிந்து
தோகையர் பாலர்கள் கோரணி கொண்டு

கவியுக மீதி லிவர்மரி யாதை
கண்டிடு மென்பவர் சஞ்சன மிஞ்ச
கலகல வென்று மலசலம் வந்து
கால்வழி மேல்வழி சார நடந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெளிவு மிராம லுரைதடு மாறி
சிந்தையு நெஞ்ச முலைந்து மருண்டு
திடமு முலைந்து மிகவு மலைந்து
தேறி நலாதர வேதென நொந்து

மறையவன் வேத னெழுதிய வாறு
வந்தது கண்டமு மென்று தெளிந்து
இனியென கண்ட மினியென தொந்த
மேதினி வாழ்வு நிலாதினி நின்ற

கடன்முறை பேசு மெனவரை நாவு
றங்கி விழுந்துகை கொண்டு மொழிந்து
கடைவிழி கஞ்சி யொழுகிட வந்து
பூதமு நாலு கவாசமு நின்று
நெஞ்சு தடுமாறி வருநேரமே

வளர்பிறை போல வெயிறு முரோம
முஞ்சடையும் சிறுகுஞ்சியும் விஞ்ச
மனது மிருண்ட வடிவு மிலங்க
மாமலை போல் யம தூதர்கள் வந்து

வலைகொடு வீசி யுயர்கொடு போக
மைந்தரும் வந்து குனிந்தழ நொந்து
மடியில் விழுந்து மனைவி புலம்ப
மாழ்கின ரேயிவர் கால மறந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழையவர் காணு மெனுமய லார்கள்
பஞ்ச பறந்திட நின்றவர் பந்த ரிடுமென
ரிடுமென வந்து பறையிட முந்த
வேபிணம் வேக விசாரியு மென்று

பலரைய மேவி முதியவர் தாமி
ருந்த சவங்கழு வுஞ்சில ரென்று
பணிதுகி றொங்கல் களப மணிந்து
பாவகமே செய்து நாறு முடம்பை

வரிசை கெடாம லெடுமென வோடி
வந்திள மைந்தர் குனிந்து சுமந்து
கடுகி நடந்து சுடலை யடைந்து
மானிட வாழ்வென வாழ்வென நொந்து

விறகிட மூடி யழல்கொடு போட
வெந்து விழுந்து முறிந்து நிணங்க
ளுரகி யெலும்பு கருகி யடங்கி
யோர்பிடி நீறு மிலாத வுடம்பை
நம்புமடி யேனை யினியாளுமே.

கட்டி யணைத்திடும் பெண் டீரு மக்களுங் காலத்தச்சன்
வெட்டி முறிக்கும் மரம்போற் சரீரத்தை வீழ்த்திவிட்டாற்
கொட்டி முழக்கி யழுவார் மயானங் குறுக்கியப்பா
லெட்டியடி வைப்பாரோ விறைவா கச்சி யேகம்பனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறக்கும் பொழுது கொடுவந்த தில்லை : பிறந்து மண்மே
லிறக்கும் பொழுது கொடுப்போவ தில்லை யிடை நடுவிற்
குறிக்குமிச் செல்வம் சிவன்றந்த தென்று கொடுக்கறியா
திறக்குங் குலாமருக்கென் சொல்லுவேன் கச்சி யேகம்பனே.

அன்னை யெத்தனை யெத்தனை யன்னையோ
வப்ப னெத்தனை யெத்தனை யப்பனோ
பின்னை யெத்தனை யெத்தனை பெண்டிரோ
பிள்ளைத் யெத்தனை யெத்தனை பிள்ளையோ
முன்னம் யெத்தனை யெத்தனை சென்மமோ
மூட னாயடி யேனு மறிந்திலே
னின்ன மெத்தனை யெத்தனை சென்மமோ
வென் செய்வேன் கச்சி யேகம்ப நாதனே.

முடிசார்ந்த மன்னரு மற்றுமுள் ளோரு முடிவிலொரு
பிடிசாம்ப ராய்வெந்து மண்ணாவ துங்கண்டு பின்னுமிந்தப்
படிசார்ந்த வாழ்வை நினைப்பதல் லால்பொன்னின் அம்பலவர்
அடிசார்ந்து நாமுய்ய வேண்டுமென் றேயறிவா ரில்லையே.

**ஆயிரம் சொந்தங்கள் அணைத்திட இருந்தாலும்**
**அப்பா உம்மைப்போன்று அன்பு செய்ய**
**யாரும் இல்லை இவ் உலகில்...**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர் மனைவி, பிள்ளைகளுடன்.......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி பிரசுரித்தவர்கள்

01. மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் , திருநகர் தெற்கு, கிளிநொச்சி.

02. குமரன் புடைவையகம்
இல.1139 திருநகர் தெற்கு, கிளிநொச்சி
இராசதுரை குடும்பத்தினர் – D-8, உருத்திரபுரம்
முறுகண்டிப் பிள்ளையார் , ஹாட்வெயார் , கிளிநொச்சி.

03. வேழன் பதிப்பக குடும்பத்தினர்
ஜெயந்திநகர், கிளிநொச்சி.

04. நியு பிரியங்கா நகைமாளிகை

05. சுரேஸ் (அறிவு) குடும்பத்தினர் , நெளுக்குளம், வவுனியா

06. ஜதீஸ்வரன் குடும்பத்தினர்

07. சக்தி சைவ உணவகம் , திருநகர் வீதி, கிளிநொச்சி

08. பாடசாலைச்சமூகம் ,
வ/ நெடுங்கேணி மகா வித்தியாலயம்.

# பதாதைகள் பிரசுரித்தவர்கள்

01. க.ஜதீஸ்வரன் குடும்பம்

02. 91/92 பழைய மாணவர்கள்
கிளி / இந்துக்கல்லூரி

03. ஊழியர் நலன்புரிச்சங்கம்
பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்
அலுவலகம், கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04. பாடசாலைச் சமூகம்
வ/நெடுங்கேணி மகா வித்தியாலயம்
05. பரமானந்தம் குடும்பம், சோலைநகர், புதுமுறிப்பு
06. பொதுச்சபை உறுப்பினர்கள்
பணிப்பாளர்கள் , சபையினர்கள், பணியாளர்கள்
கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைந்த மாதிரிப் பண்ணையாளர்
சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கம் . கிளிநொச்சி.
07. குமரன் புடைவையகம்
முறுகண்டிப் பிள்ளையார் ஹாட்வெயார்
08. சுரேஸ் (அறிவு) குடும்பத்தினர்
நெடுக்குளம், வவுனியா
09. முரளி குடும்பத்தினர்
10. கிருசாந்தன் குடும்பத்தினர்
11. கிராம அபிவிருத்திச் சங்கம், திருநகர் வடக்கு
12. லோகன் குடும்பத்தினர் (லோகன் பந்தல் சேவை)
13. திரு.அ.கனகரத்தினம் குடும்பத்தினர்
இல.33, 5ஆம் பண்ணை, கனகபுரம், கிளிநொச்சி.
14. நியூ பிரியங்கா நகைமாளிகை
15. 2015 சாதாரண பழைய மாணவர் ஒன்றியம்
கிளி / கிளிநொச்சி மகா வித்தியாலயம்
16. வன்னியின் சபரிமலை ஐயப்பன் தேவஸ்தானம்
இல 116, பிரதான வீதி, ஜெயந்திநகர், கிளிநொச்சி.
17. உதயநகர் மேற்கு அற்புத விநாயகர் அடியார்களும் பிரதம
குருக்களும்
18. யோகராசா குடும்பத்தினர் – கொக்குவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச விருட்சம்

**♦ குழந்தைவேலு + ♦ சின்னம்மா**

↓

தங்கராசா + தில்லையம்மா

♦ செல்வநாயகம் + இந்திரபூபதி

தியாகராசா + நாகேஸ்வரி

**ஆனந்தராசா** ←

சிவராசா + சுசீலாதேவி

**♦ பரமநாதன் + ஆச்சிமுத்து**

↓

→ வள்ளியம்மை

சிவபாலசுந்தரம் + நாகேஸ்வரி

இராமச்சந்திரன் + சரோஜினிதேவி

யோகேஸ்வரி + நந்தகுமார்

தனபாலசுந்தரம் + சுசீலாதேவி

பூபாலச்சந்திரன் + சௌந்தலாதேவி

பரமேஸ்வரி + ஆறுமுகநாதன்

வளர்மதி + மோகனராசா

ரவிச்சந்திரன் + சுகந்தி

| | | | | |
|---|---|---|---|---|
| மோகனராசா | தட்சாயினி | ♦ குகராசா | அரவிந்தராசா | தர்சினி |
| + | + | | + | + |
| தயாளினி | புஸ்பாகரன் | | ஷாஷ் | யசோதரன் |
| ↓ | ↓ | | ↓ | ↓ |
| அனந்திகா | அபிநயா | | அய்ஷா | அங்குழலி |
| அக்சயா | குபேரன் | | அஜான் | அருள்நயனி |
| | ஆதவன் | | | |

♦ அமரர்களைக் குறிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்
உய்வில்லை செய்நன்றி கொன்ற மகற்கு"

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காகிய

அமரர் **குழந்தைவேலு ஆனந்தராசா** அவர்களின் மரணச்செய்தி கேட்டு ஓடிவந்து எங்கள் துயரத்தை தங்கள் துயராக எண்ணி எம்மோடு துயரில் பகிர்ந்து கொண்ட உறவினர்கள், நண்பர்கள் அயலவர்கள் ஆகியோருக்கும் இறுதிக்கிரியைகளில் பங்குகொண்டவர்கள் , கண்ணீர் அஞ்சலிகள், பதாதைகள், மலர்வளையங்கள் மற்றும் உடல்சார் உதவிகளையும் எமக்களித்த அன்புள்ளங்களுக்கும் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் தொலைபேசியில் துயர்பகிர்ந்த உறவுகளுக்கும், இப்புத்தகத்தை அச்சிட்டு வெளியிட உதவிய இவழன்பதிப்பகத்தினருக்கும், ஆத்ம சாந்திக் கிரியைகளில் பங்குகொண்டு பிரார்த்தித்தவர்களுக்கும், மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**இங்ஙனம்**

**குடும்பத்தினர்**

**எளிமையாக இருப்பது தான்**
**உண்மையாக வாழக் கற்றுக்கொடுக்கும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களைத் தேடியே.....

அப்பா என்ற சொல்லுக்கு இலக்கணம் வகுத்தீர்கள்.
அழைக்கும் போதெல்லாம் அருகிருந்தீர்கள்.
அன்பினால் அரவணைத்து எமை வளர்த்தீர்கள்.
அறிவுரைகள் பல கூறி எமை கற்பித்தீர்கள்.
பிள்ளைகளைப் பெற்றால் போதாது
பேணி வளர்க்க வேண்டுமென்றீர்கள்.
நீங்கள் யாதுமாகி நின்றீர்கள்.
எங்களின் சுமைகளையெல்லாம் நீங்களே சுமந்தீர்கள்.
மொத்தத்தில் சுமைதாங்கியாய் நின்றீர்களப்பா!
நொடிப்பொழுதில் எமை வேதனையில் தவிக்கவிட்டு
மறைந்தீர்களே அப்பா!
தாங்க முடியாத வலியால்
உயிராய் நேசித்த உங்களை
கண் முன்னே பிரிந்தது கொடிய வலியாகிப் போனதப்பா.
காடு, வனம் தாண்டி , கடலையும் தாண்டி,
ஊர் வாழப் பயந்து உயிர்வாழ வேண்டி
கண்காணா தேசத்திலே கனகாலம் வாழ்ந்துள்ளோம்.
ஓடி வந்து பார்ப்பதற்கு ஒருவருடம் மட்டும் தான்
எண்ணிக்கொண்டிருக்கிகையில் ஏங்கி அழ விட்டீர்களே!
ஒரு வருடம் இருந்தவனும்
ஒரு சில மணிகளிலே பறந்து சென்றிறங்குமுன்னே
நீங்கள் எங்கே பறந்து சென்றீர்கள்.
அரசிலே ஐம்பத்தைந்தில் ஓய்வு
வெளி நாட்டில் அறுபத்தைந்தில் ஓய்வு
நாம் எழுபத்தைந்திலும் ஓய்வு தரவில்லை என்றோ ?
இறைவன் தனதடியில் உங்களை
அழைத்தார் ஓய்வுக்காய்.
அம்மாவைக் கொள்ளி வைக்க விட்ட
அநாதைகள் நாங்களப்பா.
மன்னித்து விடுங்கள் மாபெரும் மனதுடனே...
ஆண்டவன் அடியிருங்கள்
அனுதினமும் நாம் துதிப்போம்.



– பிள்ளைகள் –

வேழன் பதிப்பகம், கிளிநொச்சி. 021 228 5579

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org